Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 338 கார்த்திகை. November. 2024

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
30 TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார்?




இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

## அழகுக்கும் கவர்ச்சிக்கும் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?






## இலங்கைப் பெண்கள் அணியில் மூன்று மகாஜனாக்கல்லூரி வீராங்கனைகள்!



## கார்த்திகை 27 மாவீரர் நாள்

Dr.IN

இதழ்: 338







# ஒரு தேவதையின் முத்தம்



மாதவி

நேற்று முன்தினம்தான் 70 வயதுக் கொண்டாட்டம் பல்கேரியாவில் ஒரு ஐந்து நட்சத்திர விடுதியில் நடந்து முடிந்தது.

வந்தவர்கள் எல்லோரும் என்னை இளைஞானிக் கிவிட்டு சென்றுவிட்டார்கள்.

நேற்று இரவு தூக்கமே வரவில்லை. என்னதான் வயதாக இருந்தாலும் வலியவந்து அவள் கேட்டது ஏதோ மனதிற்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. கேட்டதை விட அவள் என் முதுமையை இரசித்தாள் என்பதில் மட்டுமே என்மனம் லயித்திருந்தது என்பதே உண்மை.

அல்லது முன் சொன்னதுபோல் என் பிறந்தநாளுக்கு வந்த நண்பர்கள் என் இளமைக்காலத்தை மீட்டி மீட்டி என்னை இளையவன் ஆக்கிச்சென்றார்கள் என்பதே உண்மையாகிவிட்டதா.

அவள் பல்கேரிய நாட்டுப்பெண் ஆங்கிலம் ஐ love you சொல்லுமளவை விட இன்னும் கொஞ்சம் அதிகமாகவே அவளுக்கு தெரியும்.

இல்லையென்றால் அவள் தன்னம் தனியாக நான் சென்றபோது you want Angel‘s மளைள. என்று கேட்டு இருக்க மாட்டாள். ஒருகணம் கணகணத்த வார்த்தை. முத்தத்தை விட முத்தத்திற்கு உரியவானா நான் என்று சுய விமர்சனம் நடந்தநேரம், அது முத்தத்தை விட இனிப்பாக இருந்தது. அன்று இரவு முழுவதும் Angel தூக்கத்தை கெடுத்தவண்ணமே இருந்தாள்.எப்பொழுது விடியும் என்பதைவிட எப்போ விடிந்து மாலை வரும்,என்று இருந்தது. மாலைதான் ஏஞ்சல் வருவாள். காதல் என்பது முதுமையில் வரும். ஆனால் அக்காதல் காமத்திற்கு அப்பால் வருவதாகவே இருக்கும். ஆனால் ஏஞ்சல் முத்தம் வேண்டுமா என்று நேருக்கு நேர் அல்லவா கேட்டுவிட்டாள்.

நான் அந்த முத்தம் கொடுக்க இன்னும் தகுதியானவராக இருக்கிறேன் என்ற ஒரு அழகிய திமிருடனேயே அன்று பொழுது விடிந்து, மாலையும் வந்தது.

எனக்கு முன்னே மூன்று இந்திய இளைஞர்கள் நின்றார்கள். நான் நான்காவதாக ஏஞ்சலை பார்த்தபடி அவர்கள் பின் தொடர்ந்தேன்.

அவள் என் முன் நிற்பவர்கள் முகத்தை நேருக்கு நேர் பார்க்கிறாள். மறுகணம் அவள் கேட்டதும்,

முத்தக்கனவை மொத்தமாகக் கலைந்தது.

அவள் அவர்களைப் பார்த்து மூன்று ஏஞ்சல் கிஸ் தரவா என்று கேட்டாள்.

என்னையும் அவள் நேற்று you want angel மளைள என்று கேட்டதன் அர்த்தம் அப்போதுதான் புரிந்தது. அது கொக்ரையில் ( Cocktail) பானத்தின் பெயர் அது.

நானும் இப்போ அதனை வாங்கிக் குடித்தேன்.

என்னதான் இருந்தாலும் அது ஒரு ஏஞ்சல் கிஸ்தான். Angel‘s Kiss.







வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 338


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார்?




இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி


நடைபெறப்போகும் பொது தேர்தலை பொருத்தவரையில் தமிழ் மக்களுக்கு அது முக்கியமானதாக இருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. தமிழ் காட்சிகள் பலதரப்பாக பிளவுபட்டுள்ள நிலைமையில் இடம்பெறும் ஒரு தேர்தலாக இது இருக்கின்றது. தமிழ் தேசிய கட்சிகள் இந்த தேர்தலில் நான்கு அணிகளாக களம் இறங்கி இருக்கின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் கடந்த காலங்களில் தமிழரசு கட்சியின் வீட்டு சின்னத்தில் தான் இந்த கட்சிகள் அனைத்தும் போட்டியிட்டு இருந்தன. இப்போது தமிழரசு கட்சி தனியாக போட்டியிடுகின்றது. ஆனால் அதற்குள் கூட இரண்டு அணிகள் உள்ளன.

கூட்டமைப்பிலிருந்து பிரிந்த ஈபி ஆர் எல்.எப், ரேலோ, புளொட் என்பவற்றுடன் மேலும் இரண்டு அணிகளும் இணைந்து உருவாக்கியுள்ள ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சி சங்கு சின்னத்தில் இந்த தேர்தலை சந்திக்கின்றது. கணிசமான ஆசனங்களை தம்மால் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என்று இந்த கட்சியும் கூறுகிறது.



மூன்றாவது அணியாக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி யாழ்ப்பாணத்தில் களம் இறங்கி இருக்கின்றது. முன்னாள் யாழ் மாநகர சபை மேயர் வி. மணிவண்ணன் தலைமையில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்கள்.

நான்காவது அணியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி வடக்கு கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றது. 10 இடங்களயாவது பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்ற கருத்தை அவர்கள் முன்வைத்து வருகின்றார்கள். மாற்றத்தை விரும்பும் மக்களுடைய தெரிவாக தங்களுடைய கட்சி தான் இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். தமிழ் மக்களை பொருத்தவரையில் இந்த நான்கு அணிகளில் எந்த அணியை மக்கள் தெரிவு செய்யப் போகிறார்கள் என்று கேள்வி முக்கியமாக இருக்கின்றது. கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அதிக ஆதரவை பெற்ற கட்சியாக இருந்திருக்கின்றது. இம்முறை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்பது இந்த தேர்தலின் போது தெரியவரும். இந்தத் தேர்தலில் முக்கியத்துவம் பெற போகும் இரண்டாவது விடயம் தமிழரசு கட்சிக்குள் உருவாகி இருக்கும் பிளவு தான். ஶ்ரீதரன் – சுமந்திரன் பிளவு கட்சியை எந்த அளவுக்கு பாதிக்கப் போகின்றது என்பது இந்த தேர்தலில் முடிவுகளின் போது தெரியவரும். கட்சித் தலைமைக்காக போட்டியிடும் ஶ்ரீதரனும் சுமந்திரனும் யாழ் மாவட்டத்தில் ஒரே அணியில் போட்டியிடுகின்றார்கள். இலங்கையில் தேர்தல் முறையின் படி ஒரு கட்சிக்கு வாக்களிப்பவர்கள் அந்த கட்சியில் இருக்கக்கூடிய வேட்பாளர்களில் தங்களுடைய விருப்பத் தெரிவை வெளிப்படுத்த முடியும்.

அந்த வகையில் மக்களுடைய ஆதரவு சுமந்திரனுக்கா அல்லது ஶ்ரீதரனுக்கா இருக்கின்றது என்பது தேர்தல் முடிவின் போது தெரியவரும். இருவருமே விருப்பத் தெரிவு வாக்குகளை பெறுவதற்காக கடுமையான போட்டியில் இறங்கி இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொருத்தவரையில் இம்முறை ஆறு உறுப்பினர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட இருக்கின்றார்கள். இந்த ஆறு பேரில் தமிழரசு கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட கூடியவர்கள் எண்ணிக்கை ஒன்றாக

10 ஆம் பக்கம் பார்க்க...





UK Tamil AWARDS
பிரித்தானியா தமிழர் விருதுகள் 2024
54 பன்முக விருதுகள், 5 ஐரோப்பிய விருதுகள்
20 வாழ்நாள் சாதனையாளர் விருதுகள்
ஒருங்கிணைந்த தமிழ் சமூகத்தின் வெற்றிகளை கொண்டாட வருகை தாருங்கள்!
கலைஞர்கள்
நடத்துனர்கள்
3-course meal with silver spoon dining service
மக்களின் அங்கிகாரம்
பிரித்தானிய தமிழர் விருதுகள்
Date: Saturday, 2nd November 2024
Venue: Crystal Grand Slough, 3 Bath Road, Slough, SL1 3UA.
Time: 4:30 PM - 10:30 PM (After Party from 11:00 PM onwards)
Buy your tickets at www.uktamilawards.com
GRAND SAPPHIRE HOTEL & BANQUETING
franco GROUP(UK) Providing Business Needs
SRM INTERNATIONAL
KT SOLICITORS LIMITED
Kugan's
GODDIVA LONDON
SELECT. LONDON
AVINCI
Banana Leaf
CARLTON LEISURE Worldwide Travel & Tours
elderPA Your Personal Care Coordinator
Universal Fortune Limited
CHAI STICKAA
BLUEBELL
LONDON MEDIC LAB
PAYROLL PAYROLL
Sayer Moore & Co Solicitors
SAYER MOORE & CO SOLICITORS
alpha TELECOM
MADRAS FLAVOURS | PENNINE & MEDICAL CARE | STOP N GO | SINGAM BAY
GYPS | LDN CONVEYANCING | JJ GROUP LTD | JAYS GENERAL STORE | MAAMALAS
AKILAN ENTERPRISES | AMANI EVENTS | BODI CLINIC | HOME CONNECT | HATTON REFRIDGERATION
SHINE TRADERS



# ராஜபக்சக்களின் பின்வாங்கல்

ஐ.நா.வின் அபிவிருத்திக்குழுவின் வருகையோடு தேர்தல் திருவிழா சூடு பிடித்துள்ளது. இந்த ஜனநாயகச் சடங்கில் வசைபாடலும், குழிபறித்தலும், அணி சேர்தலும், கோட்பாட்டு மோதலும் முதன்மை பெறுவதைக் காண்கிறோம்.

தமிழ்த் தேசியத்தை காப்பாற்ற வேண்டுமென்கிற முழக்கம் சகல மேடைகளிலும் எதிரொலிக்கிறது. ஒட்டாத குழுக்கள் அனைத்தும் தேச விடுதலை பற்றி பேசாமல். தேர்தலில் எத்தனை ஆசனங்களை கைப்பற்றுவது என்கின்ற இலட்சியத்தோடு இயங்குகின்றன.

தற்போதைய சூழலில் தேர்தல் வெற்றிக் கணக்குகள், விருப்புவாக்கு தெரிவுகள் குறித்தே பரவலாக ஆராயப்படுகிறது.

தமிழர் தாயக கணிப்புகள் பல, வன்னி மாவட்டத்தில் செல்வமும் ,காதர் மஸ்தானும் வெற்றி பெறுவார்கள் என கட்டியம் கூறுகின்றன. ஏனைய மாவட்டங்களில் எவரையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாதென்கிறார்கள்.

மலையகத்தில் அனுஷா சந்திரசேகரன் , வடிவேல் சுரேஷ் , ஜீவன் தொண்டைமான் மற்றும் திகாம்பரம் ஆகியோர் முன்னிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கு –கிழக்கு தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை திருக்கோணமலையிலும் அம்பாறையிலும் “மோதல் தவிர்ப்பு“ உடன்பாடு காணப்பட்டு தமிழரசுக் கட்சி போட்டியிடுகிறது.

சங்கின் உறுப்பினர்களும் திருக்கோணமலை வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அருண் ஹேமச்சந்திராவும் திசைகாட்டிச் சின்னத்தில் இறங்குவதால் போட்டி பலமான இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விரண்டு உணர்திறன் மிக்க இடங்களின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற முன்னிற்கும் தமிழ்த் தேசியவாதிகள், ஏனைய மாவட்டங்களில் ஏன் ஒன்றிணையவில்லை என்கிற ஆதங்கம் மக்களிடம் உண்டு.

இனி தமிழர் தாயக அரசியலுக்கும் தென்னிலங்கை அரசியலுக்குமான மோதல்கள் ,முரண்பாடுகள் குறித்து பார்ப்போம். இளையோர் பார்வையானது அநுராவின் “ தேசிய மக்கள் சக்தியின் மீது குவிவதை தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் எச்சரிக்கை உணர்வோடு அவதானிக்கின்றன.

இதன் எதிர்வினை அரசியலாக, “வடக்கு கிழக்கு ஊழல் அரசியல்வாதிகளை அநுராவால் அம்பலப்படுத்த முடியுமா?“ என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலமும்,“மதுபானசாலை அனுமதிப்பத்திர பட்டியலை (பார் லைஸென்ஸ்) அநுர வெளியிடுவாரா ? “ என்று சுமந்திரனும் கூறத் தொடங்கியுள்ளனர்.



உண்மையிலேயே சகல மட்ட ஊழல்களையும் அநுர அரசு அம்பலப்படுத்த வேண்டுமென்பதே மக்களின் பெருவிருப்பாகும்.

2015 இல் உருவாக்கப்பட்ட “நல்லாட்சி“ அரசின் மத்திய வங்கி கடன் முறி ஊழல் பற்றிய விசாரணைகள் தொடங்கியுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பெறுமதி சேர் வரி (வாட் வரி)3.5 பில்லியன் ரூபாவை செலுத்தாத மூவர் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

## ரில்வின் சில்வர் நேர்காணல்

“நுணலும் தன் வாயால் கெடும்“ என்பதைப் போல, அநுர அரசிற்கு சவால் விடுத்த உதய கம்மன்பிலவிடமே , அதற்கான ஆதாரங்களை வெளியிடச் சொல்லி விஜித ஹெரத் எச்சரித்துள்ளார். திங்களன்று வருமென்கிறார் கம்மன்பில. பார்ப்போம் .

இராஜபக்சக்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்தாலும், அக்குழுவின் இணை அனுசரணையாளர்களான கம்மன்பிலவும், விமல் வீரவன்சவும் தமது அரசியல் கருத்துக்களை உதிர்த்த வண்ணமுள்ளனர்.

இருப்பினும் இராஜபக்சக்களின் “ஈரடி பின்னால்“ நகர்வில் ஒரு அரசியல் தந்திரம் மறைந்திருப்பதாக ஊடக நண்பர் ஒருவர் தனது ஆய்வு நிகழ்வொன்றில் குறிப்பிட்டிருந்தார் .

சனாதிபதி தேர்தலில் அநுர தரப்பினரால் கட்டமைக்கப்பட்ட “ இராஜபக்ச எதிர்ப்பு“ பிம்பத்தை நாடாளுமன்றத் தேர்தலில் வலுவிழக்கச் செய்ய, இராஜபக்சக்கள் போட்டியிடவில்லை என்பதே நண்பரின் வாதம். குறைக்கப்படும் வாக்குகள் சஜித் பக்கம் கணிசமான அளவில் திரும்பும் என நண்பர் எதிர்பார்க்கின்றார். இது அநுராவின் வாக்குகளை உடைக்கும் மஹிந்தரின் தந்திரமாக இருக்கலாம்.

ஆனாலும் ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேடுகளை தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வருவதன் ஊடாக, கடந்த ஆட்சியாளர்களை அரசியல் ஊடக வெளியில் முக்கிய பேசுபொருளாக வைத்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி.

ஆகவே இராஜபக்சக்கள் தற்காலிகமாக ஒதுங்கினாலும் அநுராவின் கிடுக்கிப்பிடி, தேர்தலின் பின்னரும் தொடரும் வாய்ப்புகள் அதிகம் போல் தெரிகிறது .

அடுத்ததாக ஜே. வி .பி இன் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அவர்கள் வழங்கிய நேர்காணலொன்று, தமிழ் ஊடகப் பரப்பில் பலத்த விவாதமொன்றினை ஏற்படுத்தியுள்ளது .

அதுபற்றி பேசாமல் கடந்து செல்ல முடியாது.

“ அடித்தட்டு தமிழ் மக்களின் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையே“ என்று கூறும் சில்வா , “ அம்மக்களுக்கு 13 அல்லது அதிகார பகிர்வு என்ற பிரச்சினை இல்லை “ என்கிறார்.

ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதார வீழ்ச்சி வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களையும் பாதிக்குமென்பது உண்மை.

தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வாதார பிரச்சினையை அவர் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார் என்பதை அந் நேர்காணலே எடுத்தியம்புகிறது.

ஆனாலும் இடதுசாரி கருத்தியலை வரித்துக்கொண்ட தோழர் டில்வின் சில்வா அவர்கள், ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமையினை ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறார் ?.

அரசியல் உரிமை மட்டுமல்ல.... பொருளாதாரத்தை பங்கிடும் இறைமையுடன் கூடிய உரிமையும் மக்களின் பிரச்சினைதான்.

இவர்களுக்கும் நம்மவர்களுக்கும், இந்த இரண்டையும் இணைத்து முன்னெடுக்கும் அரசியல் புரிய வேண்டும்.

இனப்படுகொலையை எதிர்கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமையைப் புறந்தள்ளி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

வல்லரசுக் கழுகுகள் வட்டமிடுகின்றன.

அவதானம் தேவை.

மக்களோடு பேசுங்கள். அவர்களே தமக்கான அரசியல் தீர்வு எதுவென்று சொல்வார்கள்.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Luckyfly
நீங்கள் விரும்பிய நாட்களில் இலங்கை
சுற்றுலா செல்ல டிக்கெட் வசதி செய்து தருகிறோம்...
if's time to TRAVEL
AND EXPLORE THE WORLD
SRI LANKA SPECIAL TOUR
குடும்பத்துடன்
இன்ப சுற்றுலா
Travel The World
Explore your adventure with us
let's explore! the WORLD
2025 SUMMER
SPECIAL OFFER
1080 €
UDAWALAWE
NATIONAL PARK
SIGIRIYA
THE ANCIENT ROCK FORTRESS
0234 2399032
0179 14 84892
BOOK NOW
info@lucky-fly.de
www.lucky-fly.de

# சாகோஸ் தீவுகள் - இங்கிலாந்தின் கடைசி ஆபிரிக்க காலனி:



# மொரிஷியஸுக்கு மீள ஒப்படைப்பு!

**(பிரித்தானியாவின் கடைசி ஆபிரிக்க காலனியான ‘சாகோஸ் தீவுகள்’ தொடர்பாக பல வருடங்களாக நிலவி வந்த கசப்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டுள்ளது.)**

**பல** தசாப்தங்களாக நிலவி வந்த தகராறுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பிரித்தானியாவின் கடைசி ஆபிரிக்க காலனியான சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்க உடன்பாடு எட்டப்பட்டதாக ஐக்கிய இராச்சியம் 3/10/24 வியாழக்கிழமை அறிவித்தது.

சர்வதேச நீதிமன்றத்தால் (ICJ) 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொரிஷியஸின் இறையாண்மைக்கான அழைப்புகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 2022 இல் தொடங்கிய 13 சுற்று பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

மொரிஷியஸிலிருந்து சாகோஸ் தீவுக்கூட்டம் பிரிந்ததால் ஏற்படும் சட்டரீதியான விளைவுகள் குறித்து சர்வதேச நீதிமன்ற கோரிக்கையின் பேரில் மொரிஷியஸின் பிரதமர் பிரவிந்த் குமார் ஜுக்நாத் ஐநா பொதுச் சபை கூட்டத்தில் அண்மையில் உரையாற்றினார்.

## சட்டத்திற்கு புறம்பான ஆபிரிக்க காலனி:

1968 இல் மொரிஷியஸுக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன், பிரித்தானியா சட்டத்திற்குப் புறம்பாக பிரித்தானியா அரசால் ‘பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் பிரதேசம்’ (BIOT) என பெயரிடப்பட்ட சாகோஸ் தீவுக்கூட்டத்தில் ஒரு புதிய காலனியை உருவாக்கியது.

ICJ தீர்ப்புகளை வெறும் ஆலோசனைக் கருத்து என்று வாதிட்டு, தீவுகளை மொரிஷியஸுக்குத் திரும்பக் கோரும் ஐ.நா தீர்ப்புகள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளை பிரிட்டன் ஆரம்பத்தில் நிராகரித்தது. ICJ என அழைக்கப்படும் உலக நீதிமன்றம், நாடுகளுக்கு இடையேயான தகராறுகளை தீர்ப்பளிக்கும் ஐ.நா.வின் கொள்கை நீதித்துறை அமைப்பாகும்.

## தீவுவாசிகளின் கட்டாய இடம்பெயர்வு:

மொரிஷியஸிலிருந்து இத் தீவுகளைப் பிரித்து 1,500 முதல் 3000 தீவுவாசிகளை இங்கிலாந்து வெளியேற்றியது. இதன் பின்னர் சாகோஸ் தீவுகளில் மிகப்பெரிய டியாகோ கார்சியாவை அமெரிக்காவிற்கு இராணுவப் பயன்பாட்டிற்காக குத்தகைக்கு விடப்பட்டது. இவ் ஆக்கிரமிப்பை அமெரிக்க - இங்கிலாந்து இரு நட்பு நாடுகளும் கூட்டாகச் செயற்படுத்தின.

ஆக்கிரமிப்பின் பின்னர் சாகோஸில் நிரந்தர மக்கள் தொகை இல்லை என்று இங்கிலாந்து பொய்யாக அறிவித்தது. அதனால் அது தனது காலனித்துவ ஆட்சி




யை ஐநாவிடம் தெரிவிக்கவில்லை. உண்மையில், சாகோசியன் சமூகம் பல நூற்றாண்டுகளாக அங்கு சாகோஸில் வாழ்ந்து வந்தது. இங்கிலாந்து மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் 1967 மற்றும் 1973 க்கு இடையில் சாகோசியன் மக்களை வலுக்கட்டாயமாக இடம்பெயர வைத்ததன் பின்னரே டியாகோ கார்சியாவில் பாரிய இராணுவ தளத்தை உருவாக்கியது.

## டியாகோ கார்சியா இராணுவ தளம்:

புதிய ஒப்பந்தத்தின் கீழும் டியாகோ கார்சியாவில் உள்ள இங்கிலாந்து-அமெரிக்க இராணுவ தளத்தின் கட்டுப்பாட்டை இங்கிலாந்து தொடர்ந்து வைத்திருக்கும்.

ஐக்கிய இராச்சிய வெளியுறவுச் செயலர் டேவிட் லாம்மி, இராணுவ தளத்தின் எதிர்காலத்தை இங்கிலாந்து அரசாங்கம் பாதுகாத்துள்ளதுடன், நெருங்கிய காமன்வெல்த் பங்காளியான மொரிஷியஸுடனான நமது நீண்டகால உறவுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

நீண்ட காலமாக சாகோஸ் தீவுகளில் வசிக்கும் பழங்குடியினரான சாகோசியர்கள் தொடர்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு வந்தனர். மேலும் ஒப்பந்தத்தின் வரைவில் அவர்களின் வாழ்விட உரிமை முழுமையாக சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

## புதிய ஒப்பந்தம் அமுலாகுமா ?

பிரித்தானியா சாகோஸ் தீவுகளை மொரிஷியஸுக்கு திருப்பித் தர, 13 சுற்று பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வதேச அழுத்தங்களை தொடர்ந்து கடைசி ஆப்பிரிக்க காலனியை திரும்ப ஒப்படைக்க புதிய ஒப்பந்தம் உருவாகி உள்ளது.

1960- 1970களில் தங்கள் சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட சாகோசியர்களுக்கு திரும்புவதற்கான உரிமையை இந்த ஒப்பந்தம் அனுமதிக்கிறது. பிரித்தானியாவின் அன்றைய ஆக்கிரமிப்பு மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் மற்றும் போருக்குப் பிந்தைய காலனித்துவத்தின் மிகவும் அவமானகரமான அத்தியாயங்களில் ஒன்றாக விவரிக்கப்பட்டுள்ளது.

முக்கிய தீவான டியாகோ கார்சியா தொடர்ந்து இங்கிலாந்து-அமெரிக்க கூட்டு இராணுவ

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# பத்துச்சதக் குத்தி



**1963, 1969 ஆண்டு பத்துச்சதக்குத்தி நாணயம்**

குதிக்காலால் மண்ணில் குத்திச் சுழல, வரும் பள்ளத்தில் பத்துச்சததக் குத்தியைப்போட்டு, தண்ணீர் சிறிது விட்டு குதிக்காலால் அமர்த்தி இறுக்கிக் சுத்தினால் பத்துச்சதக் குத்தி பவுணாய் ஜொலிக்கும்.

1963,1969 ஆண்டு காலப்பகுதியில் பவுணாய் ஜொலித்த பத்துச் சத நாணயமே நீங்கள் காண்பது.

உண்மையில் அன்று பத்துச்சதம் பவுண் தான். படம் பார்க்க காங்கேசன்துறை ராஜநாயகி தியேட்டருக்குபோனா சைக்கிள் நிறுத்த 10 சதம். படம் இடைவேளையில் சோடா விற்பனை செய்பவனை, விலத்திக்கொண்டு ஒரு பாட்டுப்புத்தகம் வேண்டுவோம், கல்யாண நாள் பார்க்க சொல்லலாம் பறக்கும் பாவை படத்தில் எம், ஜி. ஆர். ரோஜாதேவி பாடுவதாக அந்தப்பாட்டுவரும். நல்ல பாட்டு பாட்டு புத்தகம் 10 சதம்.

அந்த நேரம் காதலிக்க நேரமில்லை காதலிகளும் எவரும் இல்லை. கலரி யிலும், இருக்கலாம், மதில் மேல் இருந்து 10 சதம் இருந்தால் கடலையும் கொறிக்கலாம்.

சைக்கிள் மிதித்து தெல்லிப்பழை சந்திக்கு வந்து குகன் அச்சகத்தில் ஒரு கொப்பி வாங்கினால் பத்துச்சதம், வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அம்மா கலைப்பா அடுப்பு மூட்ட நெருப்புபெட்டியில்லை கந்தை அம்மான் கடையில் இரண்டு வேண்டிவாடா, பக்கத்து வீட்டு பொன்னம்மா மாமிக்கும் போனமாதம் வேண்டிய ஒரு நெருப்புபெட்டியும் கொடுக்கவேண்டும். என்றா. இரண்டு நெருப்பு பெட்டி வேண்டிவந்து கொடுத்தேன் பத்துச்சதம்.

அம்மா எனக்கும் ஒரு பத்துச்சதம் தருவியேணை நான் நாளைக்கு மகாஜனாவில் சங்கரப்பிள்ளை கன்பீனிலை ஒரு போண்டா வேண்டவணை என்றேன். தந்தா பத்துச்சதம். அதோட அடிக்கடி நாவல்பழம் கேட்பியே இந்தா இன்னும் 10 சதம் வேண்டிக்கோ என்றா.

நான் அதுக்கேன் அம்மா பத்துச்சதம் பழைய கொப்பி குடுத்து வாங்குவேன் , தருவதாக இருந்தால் தாணை நான் ஒரு ஐஸ் சொக்கு நாளை வாங்குவேன் என்று ஆசையோடு வாங்கினேன். அறுபது வரும் கழிக்சு யேர்மனியில் அன்ரனின் (Anton Joseph) அவர்களின் ஆவணக்கண்கட்சியில், அவர் என்னைக்கண்டதும் உங்கள் பத்துச்சதக்குத்தி வாசித்தேன்.

என்னிடம் 1952,1964, 1969 ஆண்டு இலங்கை 10 சதக்குத்தி நிறையவே உண்டு உங்களுக்கு இரண்டு தருகிறேன் தனது நினைவாக வைத்திருங்கள் என்றார். அட எத்தனை எத்தனை நினைவுகளுடன் அவர் நினைவையும் சுமந்து வேண்டிக்கொண்டேன்.

உண்மையில் இந்த பத்துச்சதக்குத்தி அன்று என்கைக்கு வந்து என் ஆசைகளை நிறைத்த அதே பத்துச்சதக்குத்தி யாகவும், இருக்கலாம்× என்று ஆசையோடு மணந்து பார்த்தேன்.

அம்மாவின் வாசம்!

அந்த பத்துச்சதக்குத்தி யில் மணத்தது.

அப்போது ஒரு சதமும் நாம் உழைக்காத காலம் அல்லவா. அதனால் அம்மா அப்பாவின் வாசம் மட்டுமே காசிலும் வாசம் செய்யும் என்பதும் மெய்யான தே.

**மாதவி (யேர்மனி)**






# நேர்மை

ஒரு மனிதனின் வெற்றிக்கும்/ புகழுக்கும்/ செல்வாக்குக்கும், நேர்மைக்கும் எந்தவித நேரியல் தொடர்பும் கிடையாது. பிழைத்தல் என்று மனிதனால் புரிந்து கொள்ளப் பட்ட உத்திகளுக்கும் நேர்மைக்கும் கூட எந்தவிதத் தொடர்பும் கிடையாது. ஆனாலும் காலம் காலமாய் மனிதர்கள் நேர்மையாய் இருப்பதைப் பற்றியும், நேர்மையைக் கடைப்பிடிப்பதைப் பற்றியும் அதீதத் தீவிரம் கொண்டிருப்பது ஏன்? சர்வ சாதாரணமாக அறமற்ற செயல்களைச் செய்பவர்கள் கூடச் சில நேரங்களில் யாராவது ஒருவரிடமாவது அல்லது ஏதாவது ஒரு தருணத்திலாவது தங்கள் வாழ்நாளில் நேர்மையைக் கடைப்பிடித்து விட வேண்டும் என்ற ஓர் ஏக்கத்துடன் வாழ்கிறார்கள். இதற்கான அடிப்படைக் காரணம் என்ன?

நேர்மை என்பது இருத்தலின் சாராம்சமாக இருக்கிறது. நாகரிகம், வளர்ச்சி, தொழில் நுட்பம், மற்றும் பிற மனிதனால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட உத்திகள் யாவுமே அவனின் தன்முனைப்பைத் தடவிக் கொள்ளப் போதுமானதாக இருந்தாலும் அவையனைத்தும் ஏதோ ஒரு நிபந்தனைக்குட்பட்டிருக்கின்றன.




**தீபா சீறிதரன் (தைவான்)**

ஆனால் இருத்தலின் சாரம்சம் என்பது எத்தகைய நிபந்தனைகளுக்கும் உட்பட்டதல்ல( இயற்கையின் விசை விதிகள் இதற்கு விதி விலக்கு). இயற்பியலில், எந்த ஒரு அணுவும் அதன் ground stateல் இருப்பதையே விரும்புகின்றது என்று கூறப்படுகிறது. அதனுடைய lowest energy level அதுதான். எந்தவித அலங்காரமும் ஜோடனைகளும் இல்லாத ஒரு தன்மை. வெறுதலே இருத்தல். அதன் சாராம்சம்தான் நேர்மை.

நேர்மை, ஒழுக்கம், தனி மனித விழுமியங்கள் இவையெல்லாமே காலப்போக்கில் பரிணாமத்தில் ஒரு உயிரின் மரபணுவுக்குள் திணிக்கப்பட கட்டுபாடுகள் ஆகிவிட்டிருக்கின்றன. நம்பகத்தன்மையின் மீதுள்ள ஒருவித ஈர்ப்பு, நாட்டம், உள்ளார்ந்த மனித இயக்கம், ஆன்மீகச் சீரமைப்பு, சமூக நம்பிக்கை, குற்ற உணர்விலிருந்து விடுபடுவது, மரணத்திற்குப் பின் தாங்கள் விட்டுச் செல்ல விரும்பும் செல்வாக்கு, உலகளாவியக் கொள்கைகள், சக உயிர்களின் நம்பிக்கையைப் பெறுதல், இன ஒற்றுமை, என்று பல காரணங்களை யோசித்தாலும் இருத்தலின் நெருக்கடியே இதற்கான முக்கிய காரணம் என்று நினைக்கிறேன்.

10 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# உன் கண்ணில் நீர் வழிந்தால்

## Excessive Tearing (Epiphora)

கவலை வந்தால் கண்ணீர் வரும். ஆனால் கவலை இல்லாமலும் கண்ணீர் வருகிறது. உண்மையில் எந்த நேரமும் கண்களிலிருந்து கண்ணீர் சுரந்து கொண்டே இருக்கிறது. இது இயல்பானது. ஆனால் சிலருக்கு சிலவேளைகளில் கண்ணிலிருந்து நீர் அதீதமாக வழிகிறது. இது ஏன்?

## கண்ணீரின் கடமைகள்

காரணம் என்னவென்றால், கவலையை வெளிக்காட்டுவதை விட கண்களுக்கு மேலும் பல கடமைகள் உள்ளன.

கண்களை ஈரலிப்பாக வைத்திருப்பது முக்கிய கடமையாகும். கண்கள் ஈரலிப்பாக இருப்பதால்தான் கண்களை நாம் மூடித் திறக்கும்போதும், பார்வையைத் திருப்புதற்காக கண்களை ஆட்டும் பொழுதும் உராய்வு இன்றி வழுவழுப்புடன் அதனால் இயங்க முடிகிறது. கண்களுக்கு தேவையான போசணையில் ஓரளவு அதனூடகவும் கிடைக்கிறது.

தூசி மற்றும் உறுத்தக் கூடிய பொருள்களிலிருந்து கண்களைப் பாதுகாக்கிறது. கண்கள் மாசு மறுவின்றி பளிங்கு போல கண்ணீரினால் பேணப்படுவதால்தான் எமது பார்வை தெளிவாக இருக்கிறது.

கண்ணில் தொற்று நோய்கள் ஏற்படாமல் காப்பதும் கண்ணீர்தான். எமது கண்களின் மேல் மடலுக்கு கீழே பல சிறிய கண்ணீர் சுரப்பிகள் உள்ளன. அவற்றிலிருந்து நாசிக்கு அருகே கண்களில் இருக்கும் நுண்ணிய துவாரங்கள் ஊடாக வே கண்ணீர் வருகின்றது. இந்தக் கண்ணீரின் ஒரு பகுதி ஆவியாகி மறைந்துவிட, மீகுதி கண்ணீர்க் குழாய்களுடாக நாசியினுள் வழிந்து விடும். இது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழமையான செயற்பாடு. இக் குழாய் அடைபடுவதாலும் கண்ணீர் அதிகமாக வழியலாம்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

## திடீரென அதிகமாக கண்ணீர் வடிதல்

ஆனால் நாம் உணர்ச்சி வசப்படும் போதும், கண்கக்குள் ஏதாவது விழுந்து உறுத்துப்படும்போதும் அதிகமாகக் கண்ணீர் வடிகிறது. இது வித்தியாசமான செயற்பாடு. இது



கண்ணீர்ச் சுரப்பியிலிருந்து வெளியேறுகிறது. இது தற்காலிகமாக நடைபெறுவதாகும்.

தொடர்ந்து ரீ.வீ பார்க்கும்போது அல்லது கணனியில் வேலை செய்யும்போது கண்ணீர் வடிகிறது எனப் பலர் சொல்வதைக் கேட்கிறோம். இதற்குக் காரணம் என்ன?

வழமையாக எமது கண்கள் அடிக்கடி இமைக்கிறது. அதாவது தானாகவே வெட்டி மூடுகிறது. இச் செயற்பாட்டின்போது மேலதிக கண்ணீர் கண்ணீர்குழாய் ஊடாக வெளியேறிவிடுகிறது.

ஆனால் தொடர்ந்து உற்றுப் பார்க்கும் போது கண்களை வெட்டி மூடும் செயற்பாடு குறைகிறது. இதனால் கண்ணீர் குழாய் ஊடாக வடிவது குறைந்து தேங்குவதாலேயே கண்ணீராக வடிகிறது.

கண்ணில் கிருமித்தொற்று (Conjunti vitis) ஏற்படும்போதும் கண்களிலிருந்து நீர் போல வடிவதுண்டு.

கண்களின் பாதுகாப்பு சில தவறான நம்பிக்கைகள் பற்றிப் படிக்க மேலை கிளிக் பண்ணுங்கள்

## தொடர்ச்சியாக கண்களிலிருந்து நீர் வழிதல்

ஆனால் இதைத் தவிர நீண்டகாலத்திற்கு தொடரும் அதிக கண்ணீர் சுரப்பதை உாசழெைஉ நிைாழசய என்பார்கள்.

இவ்வாறான நீண்டகாலம் தொடரும் கண்ணீர் சுரப்பதற்கு மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

## தொடர்ந்து கண்ணீர் வழிதலின் காரணங்கள்

சூழல் காரணமாகலாம். இரசாயனப்பொருட்கள், புகை, வெங்காய மணம் போன்ற கண்களை உறுத்தக் கூடிய ஏதாவது ஒன்று காரணமாகலாம்.

ஒவ்வாமை காரணமாகலாம். சுழலிலுள்ள தூசி, மகரந்தம் போன்றவற்றால் ஏற்படும் ஒல்வாமை (Kernal Conjunctivitis) காரணமாகலாம். குளுக்கோமா போன்ற ஏதாவது கண் நோய்களுக்கு தொடர்ந்து கண்களுக்கு ஊற்றும் துளி மருந்துகள் கூட சிலருக்குக் காரணமாகலாம்.

கண்நோய் எனப்படும் கண்களில் ஏற்படும் கிருமித் தொற்று infective con junctivitis மற்றொரு காரணமாகும். வைரஸ் கிருமித் தொற்று எனில் நீர் போலவும், பக்றீரியா தொற்று எனில் சற்றுத் தடிப்பாக பூளையாகவும் வரும். காலையில் கண் விழிக்கும்போது அதனால் கண்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். அன்ரிபயடிக் கண் துளிகளை மருத்துவர் தருவார்.

ஓரிரு இமை முடிகள் உட்பக்கமாக சிலருக்கு வளர்வதுண்டு. Entropion என்பார்கள். இதுவும் மற்றறொரு காரணமாகும்.

வரட்சியான கண்கள் முக்கிய காரணமாகும். வயதாகும்போது பொதுவாக ஏற்படும் பிரச்சனை இதுவாகும். அடிக்கடி கண்களை வெட்டி மூடுதல், கடுமையாக காற்று வீசுமிடங்களைத் தவிர்த்தல், புகைத்தலை நிறுத்தல் போன்றவை உதவும். செயற்கைக் (Artificial tears) கண்ணீரை உபயோகிப்பதும் உதவும்.

கண்ணீர்க் குழாய் ஏற்படும் அடைப்புகளால் வழமையாக நாசிக்குள் வழிவது தடைப்படுவதால் கண்ணீராக ஓடக் கூடும். இதற்கு சிறிய சத்திரசிகிச்சை உதவும். மாறாக நுண் துவாரங்களில் ஏற்படும் அடைப்பு மருத்துவர் நீரினால் கழுவுவதன் மூலம் அகற்றுவார். சில குழந்தைகள் பிறக்கும்போது அக்குழாய் முழுமையாக வளர்ச்சியடையாததால் கண்ணீர் தொடர்ந்து வரும். சில வாரங்களில் அக் குழாய் முழுமையாக வளர்ந்ததும் கண்ணீர் பெருகுவது குறைந்துவிடும்.






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார்?

அல்லது இரண்டாக இருக்கலாம்.

இந்த நான்கு தமிழ் தேசிய கட்சிகளின் தவிர ஈ.பி.டி.பி. , அங்கஜன் ராமநாதன் தலைமையிலான சுயேச்சை குழு, வைத்தியர் அர்ஜுனா இராமநாதன் தலைமையிலான மற்றொரு சுயேச்சைக் குழு, சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஆளும் கட்சியான அநுரவின் தேசிய மக்கள் சக்தி உட்பட 44 அணிகள் யாழ்ப்பாணத்தில் களமிறங்கி இருக்கின்றனர்.

தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தின் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து இருக்கின்ற நிலைமையில் தமிழ் மக்களுக்கான மாற்றுத் தெரிவு தாங்கள் தான் என கூறிக்கொண்டு இந்த கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் இறங்கி இருக்கின்றன. மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள் என்பது தெளிவாக தெரிகின்றது. ஆனால் மக்கள் எதிர்பார்க்கக் கூடிய மாற்றத்தை கொண்டு வரக்கூடியவையாக இந்த கட்சிகள் ஏதாவது இருக்கின்றதா?

தென்பகுதி மக்களைப் பொறுத்தவரையில் தமது மாற்றத்துக்கான சக்தியாக அவா்கள் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை அடையாளம் கண்டுள்ளார்கள். கடந்த 75 வருடகால வரலாற்றில் பாரம்பரிய கட்சிகளின் மீதான அதிருப்தியின் விளைவுதான் இது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இதற்கான அரசியல் சூழலை ஏற்படுத்தியது. முன்னணியில் இருந்த அரசியல் தலைவர்கள் பலர் தேர்தலிலிருந்து ஒதுங்கவும் இந்த மாற்றம் காரணமாக இருந்துள்ளது.

தமிழ் மக்களும் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். பல தலைவர்கள் தேர்தலில் இருந்து ஒதுங்க அதுவும் காரணமாக இருந்துள்ளது. ஆனால், மாற்றத்தை விரும்பும் தமிழ் மக்களுடைய தெரிவு யார்?

இதுதான் இன்று எம் மத்தியிலுள்ள மிகப்பெரிய கேள்வி!.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதான அதிருப்தியை தேசிய மக்கள் சக்தி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள ஜே.வி.பி. அறுவடை செய்யப்போகின்றதா, என்ற கேள்வியும் பரவலாக எழுந்துள்ளது.

செப்ரெம்பர் 21 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தோ்தலில் தமிழ்ப் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசநாயக்க கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தார். அது இப்போது மேலும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு பொதுவாகவே காணப்படுகின்றது.



ஜனாதிபதித் தேர்தலில் மாற்றத்தை விரும்பிய சிங்கள மக்களின் தெரிவாக அநுரகுமார திசநாயக்க இருந்தார். தமிழ்ப் பகுதிகளில் அவரால் சிங்களப் பகுதிகளைப் போல முன்னணிக்கு வரமுடியவில்லை. என்றாலும் கூட, கணிசமான வாக்குகளை அவரால் பெற முடிந்தது.

சிங்களக் கடும் போக்காளர்களாக அறியப்பட்ட ஜே.வி.பி.க்கு தமிழா்கள் கணிசமாக வாக்களித்திருந்தமைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதான தமிழ் மக்களின் அதிருப்திதான் காரணம்.

மாற்றத்துக்காக வாக்களித்த சிங்கள மக்களுடன் குறிப்பிட்ட தொகையான தமிழர்களும் இணைந்திருந்தார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்த பதினைந்துவருட கால அனுபவமும், ஜனாதிபதித் தேர்தலில் சிங்களப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும், நாமும் மாற்றம் ஒன்றையிட்டுச் சிந்திக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது.

சுயேச்சையாக பல குழுக்களும், தென்னிலங்கைக் கட்சிகளும் வடக்கு, கிழக்கில் களமிறங்கியிருந்தாலும், தேசிய மக்கள் சக்தியின் பக்கம் தமிழ் மக்கள் திரும்புவதற்குப் பல காரணங்கள் இருந்தன. குறிப்பாக, ஊழல் அற்ற ஒரு ஆட்சியை அவர்கள் வழங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பு.

ஆனால், அண்மைய இரண்டு செய்திகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்களை சிந்திக்க வைத்துள்ளது.

முதலாவது, ஜெனீவாவில் கடந்த மாதம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடா் குறித்த அநுர அரசாங்கத்தின் நிலைப்பாடு. இரண்டாவது, 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துக்கள்.

தமிழ் மக்களை பொருத்தவரையில் ஜே.வி.பி. னுடைய கடந்த கால வரலாறு அவர்களுக்கு சாதகமாக இருக்கவில்லை. யுத்தத்திற்கு அவர்கள் வழங்கிய ஆதரவு வடக்கு கிழக்கை பிரித்தது சுனாமி கட்டமைப்பை செயலிழக்கச் செய்தது என்பன அவருடைய கடந்த கால வரலாற்றில் தமிழ் மக்களுக்கு எதிரான அவர்களுடைய நிலைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டு. ஆனால் அவர்களுடைய நிலைப்பாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவே தமிழ் மக்கள் நம்பினார்கள்.

ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துக்களும், ஜெனிவாவுடைய விவாகரத்தில் அவர்களுடைய நிலைப்பாடும் தமிழ் மக்களை சிந்திக்க வைத்துள்ளது. இந்த நிலைமையில் தமிழ் மக்களுடைய தெரிவாக இருக்கப் போவது யார்? இன நெருக்கடியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு இந்தக் கேள்விக்கான பதில் முக்கியமானது. இந்த தேர்தலை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானிப்பதற்கு இவை அனைத்தும் காரணமாக இருக்கின்றது.


நவம்பர் 14 நடைபெறப்போகும் பொது தேர்தல் இவை அனைத்துக்கும் மான பதிலை வழங்கும்!

08 ஆம் பக்கத் தொடர்ச்சி... நேர்மை

அடிப்படையில் மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தங்களை விடப் பெரியதாக ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று நம்புகின்றனர். அவர்களின் வாழ்க்கைக்கு ஓர் ஆழமான அர்த்தத்தை அவர்கள் அளித்துக்கொள்ள விரும்புகிறார்கள். நேர்மையைக் கடைபிடித்தல் அத்தகைய அர்த்தத்தை அவனுக்குக் கொடுக்கிறது.

அதன் வெளிப்பாடே உண்மையாக இருத்தல் பற்றிய தேடல் என்று நம்புகிறேன். ஐ think the deep desire to be honest is merely an existential crisis.

டொட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3
சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
கீபோர்ட் (Keyboard)
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்



# ஏறேறு சங்கிலி

## ஒரு நாளும் பனையில் ஆக்கள் ஏறேக்க விழாது

"என்னவாம்" எண்டு மனிசி கேக்க "இல்லை,மூத்தவளுக்கு நாள் வைச்சிருக்காம் எல்லாரையும் கட்டாயம் வரட்டாம் எண்டு சொல்லக் கந்தன் வந்தவன், உன்னைக் கேட்டவன் நான் தான் நீ வேலையா இருக்கிறாய் எண்டு சொன்னான் "எண்டு சொல்லி முடிக்க முதல், "நான் அப்பவும் சொன்னான் எங்கடை மூத்தவனுக்கு கேளுங்கோ எண்டு, நீங்க வாய் பாக்க எவனோ ஒருத்தன் தூக்கீட்டான்" எண்டு என்டை இயலாமையை மனிசி சுட்டிக்காட்ட அதைக்கவனிக்காம சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டன். அடுத்த கிழமை மூண்டு நாள் கொண்டாட்டத்தோடு கலியாணம் சிறப்பா நடந்து முடிஞ்சுது. கட்டி முடிச்சு மூண்டு மாசத்தில முழுகாம மகள் இருக்கிறா எண்டு கந்தன் சொல்ல வீட்டில இருந்து கோழிமுட்டை கொண்டேக் குடுக்கப் போனன். போனால் கந்தன்டை மருமோன் "வாங்கோ" எண்டு சொல்லீட்டு விடியவே சீவல் வேலைக்கு வெளிக்கிட்டுப் போனான்.

திருப்பி வீட்டை வந்து மனிசிக்கு விசயம் சொல்ல "உவன் நடுவிலான் படிப்பும் இல்லை சும்மா பந்தடிச்சுக் கொண்டு திரியிறான், அவனுக்கு தொழிலைப் பழக்குங்கோ உங்களுக்கும் அடிக்கடி நாரிப் பிடிப்பு வருது" எண்டு சொன்னதைக் கேட்டு அவனைக் கூட்டிக் கொண்டு போனன்.

எப்பிடியும் கள்ளமா எங்கயாவது ஏறி இருப்பான் எண்டு தெரிஞ்சாலும் தெரியாதது மாதிரி " ஏறத் தெரியுமோ " எண்டு கேக்க, "அப்பப்ப இளநி புடுங்க தென்னை ஏறினான் இதுகும் ஏறுவன்" எண்டான் நடுவிலான். "பனை அப்பிடி இல்லை இது பாத்து ஏறோனும்" எண்டு சொன்னதைக் கேக்காமல் எல்லாம் தெரியும் எண்ட மாதிரி அந்தரப்பட்டவனை சரி ஏறிப்பட்டாத்தான் தெரியும் எண்டு போட்டு ஏறி ஓலையை வெட்டு எண்டு விட்டன். சடசடவெண்டு முதல் பத்தடி ஏறினவன் பிறகு அப்பிடியே இறங்கீட்டான்.இறங்கினவன் தோல்வியை ஒத்துக்கொள்ளாமல் கிட்ட வந்தான்.

ஏறிறது எண்டால் சும்மா இல்லை. ஏற முதல் இறுக்கமா கச்சையைக் கட்டி, இருந்தால் shorts ஐப் போட்டிட்டு சாரத்தை மடிச்சுக் கொடுக்குக் கட்டு கட்டோணும். உனக்கெண்டு சாமா ங்கள் எல்லாம் வேணும். ஏறு பட்டி பழசு தான் வெட்டாது அதோட அடிக்கால் சிராய்ப்பு வராது, எண்டாலும் இழுத்துப் பாத் திட்டு அளவு சரி எண்டாத் தான் காலில போடோணும். தளைநாரைப் பாத்து அம்மா ட்டைக் கேட்டுப் பின்னி எடுத்து வை.

தொழில் இல்லாட்டியும் பாளைக் கத்தியை ஒவ்வொருநாளும் தீட்டி வைக்கோணும், தொழிலுக்கு கொண்டு போறதை வேற ஒண்டுக்கும் பாவிக்கப்படாது,

பழைய கருங்காலித் தட்டுப்பொல்லு ஒண்டிருக்கு பாளையைத்தட்டக் கட்டாயம் தேவை. சுத்திச் சுத்தி தட்டோணும், அப்ப தான் நுனி நசிஞ்சு நல்லா கள்ளு வடியும் எண்டு முறை ஒவ்வொண்டாச் சொல்லத் தொடங்கினன். ஏற முதல் மனசுக்கு அம்மனைக் கும்பிட்டிட்டு ஏறோணும். "ஏறு பட்டி வெட்டுதா எண்டு பாத்து, இடுப்புப்பட்டியை இறுக்கிக் கொண்டு பறீக்க சாமான் எல்லாம் இருக்கா எண்டு பாத்து, ஏறேக்க பறிக்கால கீழ விழாம சரியா வைச்சிட்டுத்தான் ஏறத் தொடங்கோணும். பிரதட்டைக்குக் கால் ரெண்டையும் சேத்துக் கீழ்க்கட்டு கட்டிற மாதிரித் தான் கால்ரெண்டையும் சேத்தபடி தளைநாரைப் போடோணும். கட்டிப்பிடிச்சு ரெண்டடி ஏறீட்டுப் கொடுக்கு மாதிரி ரெண்டு காலாலேம் மரத்தைப் பிடிச்சிட்டுக் கையை உயத்தி மரத்தைச் சுத்திப் பிடிச்சபடி உடம்பை நிமித்தி எழும்ப வேணும். எழும்பீட்டு திருப் பியும் காலால மரத்தை கொடுக்குப்பிடி பிடிச்சபடி கையை இன்னும் மேல எடுத்து பிறகு மரத்தைக் ஒரு கையால கட்டிப் பிடிச்சபடி balance பண்ணிக்கொண்டு மற்றக்கையை மரத்தோட கவிட்டுப்பிடிச்சு கையைக் குத்தி கால் ரெண்டையும் சேத்தபடியே எடு த்து மேல எடுத்து வைக்க வேணும். அப்பிடிக் காலை உயத்தேக்க உடம்பு மரத்தோட சாயாம சரிவாத்தான் இருக்கோணும் இல்லாட்டி காலை உயத்திறது கஸ்டம். மரத்தைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு மரத்தோட சேத்துக் காலை இழுத்தாக் கை கால் நெஞ்செல்லாம் சிராயப்புத் தான் வரும்" எண்டு சொல்லப் பேசாம கேட்டுக் கொண்டு நிண்டான் இந்த முறை சரியாப் பழகோணும் எண்ட விருப்பத்தோட.





Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

முதலில வெறும் ஏத்தம் இறக்கம் தான் பயிற்சி. ஓலை வெட்டி, நொங்கு புடுங்கி , சீவின பாளையில பானை மாத்தி இறக்கப் பழகி கடைசீல தான் சீவத் தொடங்கிறது. பிளேன் ஓடிற மாதிரித்தான் இதுகும் ஏற முதலே check list மாதிரி எல்லாம் இருக்கா எண்டு விபரமாய்ப் பாக்கோணும், ஏறீட்டு முட்டீல ஓட்டை, கத்தி மொட்டை எண்டு சொல்லக்கூடாது. "தொடக்கத்தில ஏறினாப்பிறகு பாளை வெட்டி முட்டி கட்டேக்க இடுப்புக்கயித்தைப் போட்டுக் கொண்டு நிக்கோணும், போகப்போக மட்டைக்குள்ள ஏறி நிண்டு வெட்டிலாம்", எண்டு திருப்பித்தருப்பிச் சொல்லிக் குடுக்க இதிலேம் இவ்வளவு விசயம் இருக்கிறது அவனுக்கு விளங்கத் தொடங்கினது.

"அதோட ஏறேக்க நேராப் பாக்கோணும் இல்லாட்டிப் பக்கத்து மரத்தைப் பாக்கலாம். மேல போகேக்க மேகத்தைப் பாத்தாலோ இல்லாட்டி இறங்கேக்க நிலத்தைப் பாத் தாலா சரி தலைசுத்தத் தொடங்கப் பயம் வந்திடும். ஆனால் கொஞ்ச நாளில பழகினாப் பிறகு ஏறி நிண்டபடி கீழ என்ன நடக்குது எண்டு பாக்க நல்லா இருக்கும் எண்டு சொன்னன். காத்துக்க ஏறி இறங்கேக்க பனைசாயிறதுக்கு எதிர்ப் பக்கமா ஏறு மற்றப் பக்கம் நிண்டா மரம் முறிஞ்சு விழப்போற மாதிரி இருக்கும். ஒரு நாளும் பனை ஆக்கள் ஏறேக்க விழாது. ஆளைத் தாங்கிற சத்தில்லாட்டி பனை சோடைபத்தீடும். முதலில ஓலை விழுந்து, நுனி பட்டு

26 ஆம் பக்கம் பார்க்க...

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள் கடல் உணவு வகைகள் அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
KADHIR
Laila Basmati Rice
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# ஒரே ஒரு ராஜ இசை வண்டு, பல மலர் மனங்களை முத்தமிட்டு செல்வதைக் கண்டதுண்டா?



உயிருக்குள் ஊடுருவி உணர்வினைத் துளைக்கும் இசையின் சிறப்பைப் பாடாத தமிழக் கவிஞன் இருக்க முடியுமா? தமிழ்க் கவிஞன் என்று குறிப்பிட்டுக் கூறுவதற்கான காரணம் உண்டு. ஆம், இயல், இசை, நாடகம் இவை மூன்றும் சேர்ந்ததே தமிழ். இதற்க்கு இணங்க,செறிந்த சொல்லாட்சி, சிறந்த ஓசை நயம், அரிய கற்பனை வளம் இவை மூன்றும் சேர்ந்து வடித்த கவிதை காலம் கடந்து போற்றப்படும் என்பதில் நம் தமிழ்க் கவி மரபில் சந்தேகமே இல்லை.

இசையின் தாக்கத்தினால் காலத்தை வென்ற காதல் ஒன்று உண்டாகிறது. இந்தச் சம்பவத்தைக் காலத்தை வென்று நிற்கும் கவிஞன் தன் கற்பனையிலேற்றி ஓசை கூட்டித் தேர்ந்த மொழிநடையில் சொல்ல முனைந்தால் ???? ஆஹா! கவிப்ரியர்களுக்கு இன்பக்களி அல்லவா ? களிவரலைக்கருதிக்கனவு கண்ட கவிக்கோமான் பாரதிக்கு இசை மீதுள்ள உன்னத உணர்வை அவன் தீட்டிய "குயில் பாட்டு " என்னும் கவிதையின் அடிகளைத் துணை கொண்டு எடுத்துக் காட்ட முயல்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஓர் ஆண் அல்லது பெண் இசைக் கலைஞர் பாடுவதாக சித்தரிக்காமல், ஒரு பறவை அதுவும் "குயில்" கானம் இசைப்பதாய் கற்பனை செய்கிறார். இந்த கற்பனைக்கு மேலும் மேலும் சுவாரசியம் சேர்க்கிறார். கவிதைக்குத் தரும் உவமையின் தரத்தில் இருந்து கவிஞனின் ஞானம் விளங்கும் என்பதும் கவி மரபின் அளவுகோல். குயில் இசைக்கும் கானம் எவ்வாறு உள்ளதென்ற பிரம்மிப்பை மிக அழகாக 3 உவமைகளில் அடக்குகிறார்.

1. காற்று மண்டலம் எங்கும் தித்திக்கும் அமுதம் கலந்து விட்டது போல

2. மிக வேகமாக மெல்லியதாக இனிமையாக ஊடுருவி எங்கும் பரவக் கூடிய மின்னல் போல

3.தேவ லோகத்தில் உள்ள மிக அழகிய பெண்களான அப்சராஸ் ஒருத்தியோ இந்தக் குயில் போல வடிவம் எடுத்து வந்து தன் குரல் மகிமையை வெளிப்படுத்துகிறது என்று விண்ணக மாதை மண்ணகம் சேர்க்கிறார்.

அடுத்து, உன்னதமான இசையைக் கேட்போர் நிலை எப்படி இருக்கும் ?

உடம்பு சிலிர்க்கும்,நான் என்ற அகங்காரம் அல்லது உறுதி குறையும், நெஞ்சத்தில் ஆசை நெருப்பு மூண்டிடும். தன்னிலை மறக்கும். பெரும் பரவசம் ஆட்கொள்ளும், நேசம் வளரும், ஒரு போதும் விலகாமல் இருக்கத் தோன்றும். காதல் களி கொண்டு ஆனந்த வாழ்வாகும். இந்த நாத நெருப்பிற்கு நம் ஆவியை அர்ப்பணம் செய்ய மாட்டோமா ? என்று தோன்றும்.

இதனைக் குயில் பாடும் சம்பவத்தினூடே பாரதி எவ்வாறு பொருத்துகிறார் என்று பாப்போம். பெண் குயில் பாடிக் கொண்டு இருக்கிறது, அதைக் கேட்ட அங்குள்ள ஆண் குயில்களின் உடம்பு சிலிர்த்து, உள்ளம் உறுதி குறைந்து ,ஆசை பெருகுகிறது. இசை கேட்க,அங்குள்ள பறவைகள் எல்லாம் சூழ்ந்து வந்து விட்டனவாம். தன் காலைக் கடனைக் கூட மறந்து போய் கேட்டு இருந்தனராம். இசை கேட்டால் தன்னிலை மறக்கும் என்பதனைக் கூற இதை விட வேறு செறிந்த ஆனால் எளிதில் புரியவும் கூடிய சொல்லாடலைப் பயன்படுத்த நம் பாரதி அன்றி வேறெவரால் முடியும் ?




**கலாசூரி**
**திவ்யா சுஜேன்**
(இலங்கை)


**வேடர் வாராத விருந்துத்**
**திருநாளில்,**
**பேடைக் குயிலொன்று பெட்புறவோர்**
**வான்கிளையில்**
**வீற்றிருந்தே, ஆண்குயில்கள்**
**மேனி புளகமுற,**
**ஆற்ற லழிவுபெற, உள்ளத் தனல்**
**பெருக,**
**சோலைப் பறவையெல்லாம்**
**சூழ்ந்து பரவசமாய்க் ...**
**காலைக் கடனிற் கருத்தின்றிக்**
**கேட்டிருக்க,**
**இன்னமுதைக் காற்றினிடை**
**எங்குங் கலந்ததுபோல்,**
**மின்னற் சுவைதான் மெலிதாய்**
**மிகவினிதாய்**
**வந்து பரவுதல்போல், வானத்து**
**மோகினியாள்**
**இந்தவுரு வெய்தித்தான்**
**ஏற்றம் விளங்குதல்போல், ...**
**இன்னிசைப் பாட்டினிலே யானும்**
**பரவசமாய்,**
**மனிதவுரு நீங்கிக்**
**குயிலுருவம் வாரோதோ?**
**இனிதிக் குயிற்பேட்டை என்றும்**
**பிரியாமல்,**
**காதலித்துக் கூடிக் களியுடனே**
**வாழோமோ?**
**நாதக் கனலிலே நம்முயிரைப்**
**போக்கோமோ? ..**

சந்தமும் ஓசை நயமும் இயைந்த இசையாக எவ்வாறு பாடல் அமைய வேண்டும்? இதனை குயில் பாட்டின் 9 அடிகளின் மூலம் அறிய முனையலாம்.

**நாதம், நாதம், நாதம்**
**நாதத் தேயோர் நலிவுண் டாயின்,**
**சேதம், சேதம், சேதம்.**

பாடலுக்கு இசையே ஆதாரமானது. ஆதாரமே ஆட்டம் கண்டால் ? சேதம் தானே ? அத்தனை பெரிய அடிப்படை உண்மையை இத்தனை இலகுவாய் 3 சொற்களை மட்டும் உபயோகித்து எப்படித்தான் சொல்ல முடிகிறது? நல்லதொரு கச்சேரியை கேட்கும் போது உள்ளத்தில் எண்ணற்ற ஆரவாரம் நிகழ்ந்தாலும், கச்சேரி நிறைவுற்ற பின் ஒரே விடயம் தான் தோன்றும். அதுவே அக்கச்சேரியின், அந்த ராஜ இசை வண்டின் வெற்றியும் விருதும் ஆகும். அது என்ன விடயம் ? ஆம், உள்ளும் புறமும் அமைதி நிலவும்.

**"மோகனப் பாட்டு**
**முடிவுபெறப் பாரெங்கும்**
**ஏக மவுன மியன்றதுகாண்"**

இத்தனை சுகானுபவம் தரும் இசைக் கலைஞனை போற்றுவதற்கு, உலகத்தில் உள்ள செல்ல பெயர்கள் அத்தனையையும் மனம் தேடிக்கொண்டு இருக்கும். இசை தந்த குயிலை நோக்கி பாரதி சொன்ன கொஞ்சும் மொழியில் மிஞ்சும் சுவையை காணும் போதெல்லாம் நெஞ்சம் கெஞ்சும்.

திரவியமே – செல்வமாகத் திகழ்கிறாய். பேரின்பப் பாட்டுடையாய் – பெரு மகிழ்வை நல்க கூடிய பாட்டு இசைகிறாய்.ஏழுலகும் இன்பத் தீ ஏற்றும் திறனுடையாய் – ஏழு உலகங்களிலும் சுக நெருப்பை ஏற்றக் கூடிய திறமையுடையாய்.வானத்து புள்ளெல்லாம்மையலுறப்பாடுகிறாய்– ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகள் எல்லாம் மோகம் கொள்ளும் படி பாடுகிறாய் ஞானத்தில் புட்களிலும் நன்கு சிறந்துள்ளாய் – மற்றைய எல்லாப் பறவைகளை விடவும்

31 ஆம் பக்கம் பார்க்க...










# "யாதோ பொருளாம் மாயக் கண்ணன்" அபிநயக்ஷேத்ராவின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழா

ரஞ்ஜினி சுப்பிரமணியம்









அன்பும் பாச அரவணைப்பும் மனதை நெகிழச் செய்தது.

ஆடல் ஒரு தெய்வீகக் கலை என்பது உண்மைதான்.

அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளியின் குரு "கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்களின் தலைமையில் 10.10.24 மாலை 6 மணியளவில் கொழும்பு பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்ந்தது.

நிகழ்வினை பூஜைகளோடு ஆரம்பித்து வைத்தவர் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள். முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தவர் சட்டத்தரணி திருமதி சுகந்தி ராஜகுலேந்திரா (தலைவர் , கொழும்பு தமிழ் சங்கம்) அவர்கள். சிறப்பு அதிதியாக லண்டனில் இருந்து வருகை தந்தவர் திருமதி நிறைஞ்சனா சுரேஷ்குமார். (உலக இலங்கை பரத நாட்டியக் கலைஞர் சங்கத்தின் செயலாளர்)அவர்கள்.

இன, மத, மொழி வேறுபாடின்றிய நிகழ்வு. அபிநயக்ஷேத்ரா மாணவர்கள் புதுமைகளில் இம்முறை தாய் சேய் இணைந்து வழங்கி நிகழ்விற்கு மேலும் சிறப்பினை சேர்த்து.

எளிமையாக அதே சமயம் நேர்த்தியாக அமைக்கப்பட்ட மேடையில் கச்சிதமான ஒழுங்கமைப்புடன் சிறார் முதல் பதின்ம வயதினர் கலந்து கொண்டு மிகச் சிறப்பான முறையில் தமக்குரிய நடன வடிவங்களை அரங்காற்றுகை செய்தனர். சிறார்கள் கண்ணனாக அலங்கரித்திருக்க தமது அன்னையருடன் சேர்ந்து ஆடிய நடனமும் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

ஸ்ருதி கோபிநாத் ஆடிய நேர்த் தியான அங்கசுத்தமான காலிங்க நடனம் மனதைக் கொள்ளை கொண்டது.

திரை மூடப்படாமலே தொடர்ந்து கச்சிதமான கால அவகாசத்தில் நடனங்கள் ஒப்பேற்றப் பட்டமை பாராட்டத் தக்கது. சபையோரை சலிப்பின்றி ஆர்வத்துடன் நிகழ்வினைக் கவனிக்க வைத்தது. நிகழ்வின் நிறைவில் திருமதி திவ்யா சுரேன் அவர்கள் சிறப்பு அதிதிக்கும் வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

முதன்மை விருந்தினர் சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் போது , அவருக்கு அபிநயசேக்ஷத்ரா நடனப் பள்ளியுடன் தொடர்ந்து வரும் நீண்ட கால பங்களிப்பு மற்றும் அபிமானம் பற்றியும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் இறுதியில் நடன ஆசிரியை திவ்யா சுஜேனுடன் நடன மாணவர் காட்டிய குருபக்தியும் அன்பும் பாச அரவணைப்பும் மனதை நெகிழச் செய்தது. ஆடல் ஒரு தெய்வீகக் கலை என்பது உண்மைதான்.



# வேடர்களிடத்தில் கலைகள்: 0௨

இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள சுமார் 40 ற்கும் மேற்பட்ட குகைகளின் வழி வேடர்களின் கலைகள் தொடர்பாகவும் அறிய முடிகிறது, குறிப்பாக அன்றாட தேவையின் நிமிர்த்தமாக மிக எளிய முறையில் மட்பாண்ட உற்பத்திகள் நடைபெற்றிருக்கின்றன. அத்தோடு வேட்டையாடல் முறையில் இருந்து சேனைப் பயிற்செய்கை முறைக்கு மாற்றம் அடைந்த பிற்பாடு பொருளாதார தேவைகளின் நிமிர்த்தம் மர செதுக்கல்கள் மற்றும் கடைச்சல் வேலைகளிலும் ஈடுபட்டுள்ளனர். கருங்காலி மரம், யானைத்தந்தம், இன்னும் சிலவகை விதைகள் இவற்றிற்கான மூலப் பொருட்களாக பயன்படுத்தப் பட்டுள்ளன.

காடுகளில் தமது இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்ட சிலவகைப் பொருட்கள் இசை மீட்கும் கருவிகளாக காணப்பட்டன. விலங்குகளின் சத்தங்களின் பிரகாரம் சத்தம் ஏற்படுத்தக்கூடிய இசைக்கருவிகளை உருவாக்கினர். சுற்றுச் சூழலில் கிடைத்த பொருட்களைக்கொண்டு இவை உருவாக்கப்பட்டன. தேங்காயை கொண்டு உருவாக்கப்பட்ட "பும்மெடிய" என்னும் இசைக்கருவியும், சாந்திக் கருமங்களின்போது இசைக்கின்ற பறை, முழவுமேளம் ஆகியவை முதன்மையானவை. தவிர மான்கொம்பு, இரும்புக் கம்பிகள் அல்லது மண்வெட்டிகளில் தட்டி ஓசை எழுப்புதல், இரண்டு சிரட்டைகளை தட்டி ஒலியெழுப்புதல், காய்ந்த பலாக்காயை கொண்டு யானையின் ஓசையை எழுப்புதல், மட்பாத்திரத்தின்மேல் தோலை கட்டி அதன் நடுவில் குங்குலிய எண்ணை தடவிய நூலொன்றை இழுப்பதால் புலியின் உறுமலைப் போன்ற ஓசையினை எழுப்புதல் போன்ற முறைகளிலும் இசை எழுப்பப்படுகிற முறைகள் தொடர்கின்றன.


## சடங்குகளும் வழிபாடுகளும்

இதேபோன்று வேடர் சமூகத்திடம் காணப்படுகிற சடங்குகளும் வழிபாடுகளும் சுவாரஸ்யமானவை. "உறவுப் பேய்களை வழிபடுதல்" என்று சொல்லுகிற இறந்தவர்களை வழிபடுகிற மரபு வேடர்களிடத்திலே ஆழ வேரூன்றி இருக்கின்றது. இறந்த தமது உறவுகள் பேய்களாக பிறந்து காட்டில் உலவுவதாகவும் அவர்களை மகிழ்விப்பதன் மூலம் தாம் நன்மை அடையலாம் என்றும் வேடர்கள் நம்புகின்றார்கள். உறவுப் பேய்களுக்கு நடாத்தப்படும் இத்தகைய சாந்திக் கருமங்களால் காடுகள், மலைகள், ஓடைகள், நீரேரிகள் பாதுகாக்கப்படுகின்றன என்றும் அனர்த்தங்கள் மற்றும் நோய்களில் இருந்து தமக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்றும், தேன், கனிகள், வேட்டை உணவுகளை பெற்றுகொள்ள முடியும் என்றும் நம்புகிறார்கள். இதன்பொருட்டு அடுக்கு என்கிற உணவு முறை வழிபாடு நடத்தப்படுகிறது.

பெண்களை சிருஸ்டித்தலின் மூலமாகவும், காத்தலின் அடையாளமாகவும் நம்புகின்ற வழக்கம் வேடுவர் சமூகங்களில் ஆழ வேரூன்றியுள்ளது. மரணமடைந்த தமது பரம்பரையைச் சேர்ந்த பெண்களை செவிலித் தாய்மார்களாக உருவேற்றி அன்னதானமிட்டு சாந்திசெய்து வணங்கி வருகிறார்கள், இச்செவிலித் தாய்மார்கள் நோய் நொடிகளில் இருந்து தமது பிள்ளைகளை பாதுகாப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். இவர்களை "கிரிஅம்மாவரு" என்றும் "நாச்சி" என்றும் அழைத்து வருகிறார்கள்.

இவை ஒருபுறம் இருக்க மந்திர தந்திரங்கள் மீதான நம்பிக்கையும் இங்கு ஆழமாக உணரப்படுகிறது. புலி, பாம்பு போன்ற ஆபத்தான விலங்குகளிடம் இருந்தும் நோய் நொடிகளில் இருந்தும் தம்மை காக்கின்ற மாபெரும் சக்தியை மந்திரங்கள் கொண்டிருக்கின்றன என்றும் தேன் சேகரிப்பிற்கு உதவும் என்றும் இவர்கள் நம்புகிறார்கள். அதே நேரத்திலே வனத்தினுள் தமது பாதுகாப்பை வேண்டியும், விலங்குகளை பிடித்து வேட்டை செழிப்புற வேண்டியும் நேர்த்திக் கடன்களை வைத்து நேர்த்தி செலுத்தி வருகிறார்கள். உயரம் குறைவான குன்றுகளின் மீது தங்களுடைய உறவுப் பேய்களுக்கு இவ்வகை நேர்த்திக் கடன்களை செலுத்துகிறார்கள்.

வேடர்களிடத்தில் பதினெட்டு வகையான மைபார்க்கும் முறைகளும் வழக்கத்தில் இருக்கின்றன. நெற்குவியல், வில் மற்றும் கல் ஆகியவை மைபார்த்தலுக்குரிய சாதனங்களாக பயன்படுத்தப்படுகின்றன. தமது கோத்திரத்தை சார்ந்த ஒருவருக்கு நோய் ஏற்படுகிறபோது அந்த நோயை ஏற்படுத்திய பேய் எதுவென்று அறிவதற்கு மட்டுமே குறித்த மைபார்க்கும் முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



சர்மிலா வினோதினி
(இலங்கை)

"மலைப்பேய்" என்கிற ஒருவகை பேயை அழைத்து தமக்கு உதவிசெய்யுமாறு வேடர்கள் வேண்டுகிறார்கள். "மலைத் தேவ்" என்றும் இம்மலைப்பேயை அழைக்கிறார்கள்.

பேயாட்டம் என்கிற சடங்கும் இச்சமூகத்திடம் முக்கியம் பெறுகிறது. கர்ப்பிணிப் பெண்களின் பாதுகாப்பிற்காக இப்பேயாட்டம் நடத்தப்படுகின்றது. உயரமான முக்காலி ஒன்றின் அருகில் அம்பொன்று புதைக்கப்பட்டு பிராத்தனையை ஆரம்பிப்பார்கள், பின்னர் குறித்த அம்பை பிடுங்கிக் கொண்டு முக்காலிக்கு அருகில் சென்று ஆட்டத்தை ஆரம்பிப்பார்கள். வேட்டைக் களத்தில் வேட்டைகள் கிடைக்காத போதும் ஆட்டம் நிகழ்த்தப்படுகிறது. இதன்போது நாக மரத்தின் இலைகளால் அலங்கரிக்கப்பட்ட அம்பொன்றை நிலத்தில் நட்டபின் மன்றாட்டங்களை சொல்லியபடி அவ் அம்பைச் சுற்றி குழுவாக சேர்ந்து ஆடப்படும் இவ் ஆட்டம் "அம்புப் பேயாட்டம்" என்று அழைக்கப்படுகிறது. எனினும் பிரதேசத்திற்கு பிரதேசம் இவர்களுடைய சடங்குகளிலும் சம்பிருதாய முறைகளிலும் வித்தியாசங்கள் காணப் படுகின்றன. தவிர, வேடர்கள் மத்தியில் கதிர்காம வணக்கமும் முதன்மை பெறுகின்றது, முருகனின் பாரியார் வள்ளி தமது குலத்தை சேர்ந்தவர் என்கிற நம்பிக்கையும் இவர்களிடம் நிலவுகிறது.

## சமகால வாழ்வியல்

இவ்வாறாக தம் வாழ்வோடும் வாழுகிற நிலத்தோடும் சுற்றுச் சூழலோடும் இணைந்து பயணப்படுகிற வேடுவர்களின் வாழ்க்கைமுறை கவனிக்கத்தக்க ஒன்றாக இருக்கிறது. எனினும் நவீன மயமாதலின் விளைவுகள் வேடுவர் குலத்திடமும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. குறித்த ஒரு இடத்தில் குடியிருப்புக்களை அமைத்து சேனைப் பயிற்செய்கையினை மேற்கொண்டு சில மரவேலைகளை மேற்கொண்டு வாழுகின்ற எளிய வாழ்க்கை முறைக்கு வேடுவர் சமூகமும் தம்மை பழக்கம் படுத்தி இருக்கின்றது. அத்தோடு காடுகளில் சேகரிக்கின்ற கொய்யாப் பழம், தேன், மற்றும் இன்னபிற பழவகைகளை விற்பனை செய்தல், குரக்கன் போன்ற தானியங்களை விளைவித்து விற்பனை செய்தல் என்று பணமீட்டுவதற்கான சிறு பொருளாதார முயற்சிகளிலும் ஈடுபடும் வழக்கம் இவர்களிடம் அறிமுகமாகி இருப்பதோடு நவீன மயமாதலின் செல்வாக்கும் மெல்ல மெல்ல உள்நுழையத் தொடங்கியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.






# முற்றத்தில் முதல் சுவடு!

## நாமே மாற்றத்தின் துவக்கப் புள்ளியாக வேண்டும்

ரோசா பெர்க் எனும் பெயரை வரலாறு மறக்காது. அவள் ஒரு கருப்பினப் பெண். அமெரிக்காவின் அலபா மாபிலுள்ள மாண்ட்காமெரி நகரில் 1955ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்றாம் தியதி பேருந்தில் ஏறுகிறார். அப்போது கருப்பர்கள் ஒதுக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் கிடந்த காலம். பேருந்துகளில் முன் வரிசைகள் எல்லாம் வெள்ளையின மக்களுக்கானது. பின்னால் கொஞ்சம் இருக்கைகள் கருப்பின மக்களுக்கானது.

வெள்ளை இன மக்களின் இருக்கைகள் காலியாய் இருந்தால் கூட கருப்பின மக்கள் அமரக் கூடாது. ஒருவேளை வெள்ளை இன மக்களின் இருக்கைகள் நிரம்பி விட்டால், கருப்பின மக்கள் தங்கள் இருக்கைகளை விட்டு எழுந்து அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். ரோசா பெர்க் சென்ற பேருந்தில் கூட்டம் சேர்ந்தது. வெள்ளையர்களின் இருக்கைகள் நிரம்பின. இப்போது கருப்பர்கள் எழுந்து வழி விட வேண்டும். ஓட்டுநர் கருப்பர்கள் எழுந்து வெள்ளையர்களுக்கு இருக்கை கொடுக்கச் சொல்கிறார். எல்லோரும் எழுந்து இடம் கொடுக்கிறார்கள்.

பலருக்கும் எழும்ப விருப்பமில்லை, ஆனாலும் வேறு வழியில்லை எழும்புகிறார்கள். ஆனால் ரோசா பெர்க் மட்டும் எழும்பவே இல்லை. ஓட்டுநர் எவ்வளவோ சொல்லியும் அவள் எழும்பவில்லை. நாள் முழுவதும் கடின வேலை பார்த்து வந்த அவள் சோர்வில் இருந்தாள். கருப்பு வெள்ளை ஆதிக்க மனநிலைக்கு எதிராய் இருந்தாள். தங்களை யாராவது விடுவிப்பார்களா? தங்களுக்காக யாராவது குரல் கொடுப்பார்களா? என நினைத்தபடி எழுந்து நின்ற மக்களுக்கு மத்தியில் உறுதியுடன் அமர்ந்திருந்தாள் அவள்.

எதுவும் நடக்கலாம். அவள் இழுத்து வெளியே எறியப்படலாம். அல்லது வெள்ளையர்களின் முஷ்டிகளின் மூர்க்கத்தனமான மோதலை நிகழ்த்தலாம். ஏன், கொலை கூட செய்யப்படலாம். ஆனால் அவள் அசரவில்லை. அடிமைத்தனத்தின் ஆணி வேரின் அருகே சிறு பாதரசத் துளியாய் அவள் அமர்ந்திருந்தாள். வரலாறு அவளை அந்த இருக்கையில் பசை போட்டு ஒட்டி வைத்திருந்தது.

‘போலீசை கூப்பிடுவேன்‘ என மிரட்டினார் ஓட்டுநர். ’கூப்பிடுங்கள் என்றாள் அவள்‘. காவலர்கள் வந்தார்கள், சட்டத்தை மீறிய தாய் அவள் கைது செய்யப்பட்டாள். ஜெயிலில் எறியப்பட்டாள். நீதிமன்றம் அவளுக்குக் கடுமையான அபராதம் விதித்தது. அவள் அதை எதிர்த்து வாதிட்டாள். கருப்பினம் ஏன் அடிமையாய் இருக்க வேண்டும் என கேள்வி எழுப்பினாள். அவளது செய்கை அமெரிக்கா முழுவதும் ஒரு மாபெரும் போர் பற்றி எரிய உரசி எறியப்பட்ட தீக்குச்சியாய் மாறியது.

கருப்பின மக்கள் ஒட்டு மொத்தமாக பேருந்துகளை நிராகரித்தார்கள். ஓராண்டுக்கும் மேலாய் அந்த போராட்டம் நீடித்தது. சுமார் 75வீதம் பேருந்து வருமானம் கருப்பர்களிடமிருந்தே வந்து கொண்டிருந்தது. இப்போது அது போய் விட்டது. அரசு கடைசியில் அசைந்து கொடுத்தது. அமெரிக்க சுப்ரீம் கோர்ட் பேருந்துகளில் பாகுபாடு காட்டுவது அரசியலமைப்புக்கு எதிரானது என தீர்ப்பளித்தது. கருப்பின மக்களின் மாபெரும் வெற்றியாய் வரலாறு அதைப் பதிவு செய்தது.

மாற்றம் என்பது என்னிலிருந்தும் தொடங்கலாம் எனும் ரோசா பெர்க்கின் நம்பிக்கை ஒரு மிகப்பெரிய அரசியல் மாற்றத்தை அமெரிக்காவில் நிகழ்த்தியது. மாற்றத்தை யாராவது நிகழ்த்தட்டும், அந்த வெற்றியில் நான் குளிர் காய்வேன் என்று தான் எல்லோரும் காத்திருந்தார்கள். என்னிலிருந்து தொடங்கட்டும் மாற்றம் என யாரும் நினைக்கவில்லை. அதை ஒரு பெண் நினைத்தபோது சமூகம் மிகப்பெரிய மாற்றத்தைச் சந்தித்தது.



எல்லா பயணங்களுக்குமான முதல் சுவடு முற்றத்தில் தான் வைக்கப்படுகிறது. நமது முதல் முயற்சியே பயணங்களின் வெற்றியை நிர்ணயிக்கிறது.

நமது சமூகமும், திரைப்படங்களும் எல்லாமே ஒருவருடைய பிரச்சினையை இன்னொருவர் வந்து தீர்ப்பதையே கற்பிக்கிறது. நமது புராணங்களும், இதிகாசங்களும், புனித நூல்களும் எல்லாமே யாரோ வந்து பிரச்சினையைத் தீர்ப்பதைத்தான் முன்னிறுத்துகின்றன. நாமே பிரச்சினையைத் தீர்ப்பதைப் பெரும்பாலும் ஊக்குவிப்பதில்லை.

சமூகத்தில் என்ன பிரச்சினை வந்தாலும் அதற்குக் காரணம் பிறர் தான் என்றும், அவர்கள் தான் அதைத் தீர்க்க வேண்டும் என்றும் வாதிடுவதே மக்களின் வாடிக்கையாகி விட்டது. எங்கள் வீட்டுக்கு எதிர்புறம் ஒரு குப்பைத் தொட்டி உண்டு. அதில் குப்பையைப் போட வரும் மக்கள் பாதி பேர் சாலையிலிருந்தே “பாஸ்கெட் பால் “விளையாடுவதைப் போல குப்பைக் கவரை எறிவார்கள். அது குப்பைத் தொட்டியைச் சுற்றி விழுந்து பல்லிளிக்கும். இன்னும் சிலர் பைக்கில் போய்க்கொண்டிருக்கும் போதே கவரை எறிவார்கள். அது பக்கத்து வீட்டில் விழுகிறதா என்பதைக் கூட பார்ப்பதில்லை.

ஒரு குப்பையைப் போடுவதில் கூட நமது கடமையை உணராத நாம் தான், ஊரெல்லாம் சாக்கடையா இருக்கு, மழை பெஞ்சா தண்ணி வருது, சாக்கடை எல்லாம் அடைச்சு கிடக்கு, எல்லா இடத்துலயும் குப்பை, கொசு நிறைஞ் சிடுச்சு என்றெல்லாம்

17 ஆம் பக்கம் பார்க்க...

Thushi -Deko



Thushiyanthan Thiruselvam
Tel:02305 - 85945 - 0176 608 108 13

மங்கல இசை



உங்கள் மங்களகரமான வைபவங்கள் அனைத்திற்கும் நாடுங்கள்.
ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி
தவில் லயஞானச் சுடரொளி
கே.பி.செல்வநாயகம்
Tel: 01738547489

# முற்றத்தில் முதல் சுவடு!



பேசி அரசையும், அதிகாரிகளையும் குறை சொல்கிறோம். மாற்றம் நம்மிடமிருந்து தொடங்க வேண்டும் என்பதை நாம் உணர்வதே இல்லை.

கண்ணாடி நமது முகத்திலிருக்கின்ற குறைகளைக் காட்டும், கழுவாது. நம்மிடமிருக்கின்ற குறைகளை நாம் உணராத வரை அதை சரி செய்யவும் முடியாது. டீம் ஒழுங்கா வேலை செய்யவில்லை என ஒரு மேலதிகாரி கருதினால், அதற்கு முன் 'தான் அதற்கு எந்தெந்த விதங்களில் காரணியாய் இருந்தேன்' என சிந்திக்க வேண்டும். தேவையான நேரம், பொருட்கள், கருவிகள், வாய்ப்புகள், சூழல்கள் எல்லாவற்றையும் உருவாக்கிக் கொடுத்தேனா என யோசிக்க வேண்டும்.

நாம் சரியாக அனைத்தையும் கொடுக்காவிடில், கண்டிப்பாக ரிசல்ட் வேறு மாதிரி தான் வரும். நான் பனங்காயை நடுவேன், ஆனால் அது தென்னை மரமாக வளரவேண்டும் என நினைப்பது முட்டாள் தனம்.

பிறரைக் குறை சொல்வதை விட்டு விட்டு, பிறருக்கு வழிகாட்டிகளாய் நாம் இருக்க வேண்டும். கடலில் போகும் கப்பலைப் பார்த்து கலங்கரை விளக்கம் கத்திக் கூப்பிடுவதில்லை, வழிகாட்டும் ஒளியை மட்டும் அனுப்பும். ஒளி நம்மிடமிருந்து வெளிப்படும்போது கப்பல் அதன் இலக்கை அடைந்து விடுகிறது! ஒளியை நாம் அணைத்து விட்டால் கப்பல் ஆபத்தில் சிக்கி விடும்.

பூமராங் கேள்விப்பட்டிருப்போம். வீசி எறிந்தால் சுற்றிவிட்டு நம்மிடமே திரும்பும் அது. குறை சொல்லும் பழக்கமும் அப்படித் தான். நாம் பிறரைக் குறை சொன்னால், மாறி மாறி கடைசியில் யாரோ ஒருவர் நம்மைக் குறை சொல்வதுடன் தான் அது முடியும்.

எல்லா இடங்களிலும் இருட்டு இருக்கிறது என சலித்துக் கொள்வதை விட ஒரு சின்ன துளி வெளிச்சத்தையேனும் நாம் ஏற்றி வைப்பதே சிறந்தது. ஒற்றைத் துளியினால் என்ன நேர்ந்து விடப் போகிறது என நாம் நினைக்கலாம். ஓராயிரம் ஒற்றைத் துளிகளே பேரொளி! இருட்டு எப்போதுமே இருட்டை விரட்டாது, ஆனால் வெளிச்சம் அதை கன கட்சிதமாய்ச் செய்யும். இருட்டை விரட்ட நாம் செய்ய வேண்டியது இருட்டோடு மல்யுத்தமல்ல, வெளிச்சத்தோடான வரவேற்பு!

இதெல்லாம் நடக்கிற காரியமா ? எப்போ இதெல்லாம் மாறும் ? நான் ஒருத்தன் மட்டும் நினைச்சா என்ன ஆயிட போவது எனும் மனநிலையிலிருந்து நாம் வெளியே வர வேண்டும். இதெல்லாம் ஃபாஸ்ட் புட் போல சட்டென நடக்கும் விஷயங்கள் அல்ல. ஒரு விதை விதைக்கப்பட்டால், அது அதற்குரிய காலத்தை எடுத்தபின்பே முளை விடும், வேர் விடும். அது கனி கொடுக்க நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். எனவே விதைப்பது மட்டுமே முக்கியமானது. நமது பணி அது, அதைச் செய்கிறோமா?

ஒவ்வொரு செயலையும் நாம் பொறுப்பெடுத்துச் செய்யும் போது தான் சமூகம் வளம் பெறும். 'இது என்னோட வேலை'



ரோசா பெர்க்

என ஒவ்வொருவரும் ஒவ்வொரு சின்னச் சின்ன செயலையும் செய்ய வேண்டும். நான் இதைச் செய்வதால் அடுத்தவனுக்கு ஏதாவது அசௌகரியம் வருமா என்பதை சிந்திக்க வேண்டும். ஏன் இதைச் செய்யல எனும் கேள்வியை விட ? இதுக்கு நான் என்ன செய்யலாம் எனும் சிந்தனையே தேவையானது.

போரில் வெற்றி பெற வேண்டுமெனில் வலிமையாய் இருக்க வேண்டும், ஆயுதம் ஏந்த வேண்டும், வன்முறையில் இறங்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்துக் கிடந்த சமூகத்தை 'அஹிம்சை' எனும் ஆயுதத்தால் வீழ்த்தினார் மஹாத்மா. அத்தனை எதிர்ப்புகளையும், பழிச்சொற்களையும் தாண்டி அஹிம்சையை தனது செயலாய் மாற்றினார். அதன்பின் தான் அஹிம்சைப் போர் உலகெங்கும் பரவியது. தனது பதின் வயதுகளிலேயே ஒரு மாபெரும் மாற்றத்துக்கான ஒளியாய் எழுந்தவர்தானே பாகிஸ்தானின் மலாலா. அவரது துணிச்சல் இஸ்லாமியப் பெண்களின் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. இப்படி உலகம் முழுவதும் உதாரணங்கள் நிரம்பி வழிகின்றன.


மாற்றத்துக்கான முதல் சுவடை நாமே எடுத்து வைக்கும்போது தான் வெற்றிகள் வசமாகும். பிறரைக் குறை சொல்வது தீர்வை நோக்கி நம்மை நகர்த்தாது. மனிதர்களை நோக்கியே நமது பார்வையைச் செலுத்தும். நமது நோக்கம் தீர்வுகளே, திட்டுகளல்ல. நாமே மாற்றத்தின் துவக்கப் புள்ளியா கும் போது நம்முடைய தன்னம்பி க்கை வலுப்பெறும். நமது திறமைகள் கூர்மையாகும். நமது வெற்றிகள் எளி தாகும். ஆசிரியர் விடை சொல்லட்டும் என முயற்சி செய்யாமல் இருக்கும் மாணவர்கள் பெரிய வெற்றிகளை அடைவதில்லை.

நாம் மாற்றத்துக்கான முதல் சுவடை எடுத்து வைக்கும் போது, நம்மைச் சுற்றியிருக்கும் மக்களும் அதனால் உந்தப்பட்டு செயல்பட முன்வருவார்கள்.

மாற்றத்தை விரும்புவோம் நம்மிடமே திரும்புவோம்

## யாழில் மும்மொழிகளிலும் சிறப்புச் சித்திகள் (ஏ) பெற்று தரண்யா சாதனை!





தரண்யா கோபிநாத் 2013 ஆம் ஆண்டு முதல் உடுவில் பெண்கள் கல்லூரியில் தரம் 01 முதல் கல்வி கற்று வருகிறார்.

பல்துறைகளிலும் தேர்ச்சி பெற்று சிறப்புற விளங்கும் மாணவி, மும்மொழிகளிலும் அசாத்தியமான திறமை யுடையவர். கடந்த க. பொ. த. பரீட்சையில், தமிழ், ஆங்கிலம், சிங்களம் என மூன்று மொழிகளிலும் , அதிவிசேட சித்தியாக ஏ எடுத்துள்ளார். என்டா சிங்கள மொழியும் என முகத்தை சுழிக்கவேண்டாம். இது அரசியல் அல்ல. இது கல்வி. வெளிநாடுகளில், தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, யேர்மன் என பல மொழிவித்தகர்களாக நம் இளம் சந்ததியினர் வலம் வருவது எப்படி மகிழ்ச்சிதரும் செய்தியென வாழ்த்துகள் சொல்வோமோ, அதுபோல தரண்யாவையும் வாழ்த்துவோம்.

**செய்தி. யோ. சாந்தி.**








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


JMFOA
இசைச் சுவடுகள்
2025
DEUTSCHLAND
Aktuelles Projekt
RETTET UNSERE JUGEND VOR
DROGENMISSBRAUCH
போதையில் இருந்து இளைஞர்களை
காப்பாற்றுங்கள்
Nächstes Projekt:
FRÜHERKENNUNG VON KREBS UND AUFKLÄRUNG IN DEN
NÖRDLICHEN UND ÖSTLICHEN REGIONEN SRI LANKAS
இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் ஆரம்பகால புற்றுநோய்
கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு
SINGLE
25EUROS
VIP
50 EUROS
FREE ENTRY
FOR DONATION
ABOVE
100 EUROS
KLICKEN SIE HIER,
UM TICKETS ZU BUCHEN
JAN
SUNDAY 26 12.00 NOON
2025
Pulsschlag, Bürgerhaus,Vogelpothsweg 15,44149
Dortmund










# அழகுக்கும் கவர்ச்சிக்கும் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?



நண்பர்களே, இதை ஒரு முறை கற்பனை பண்ணிப் பாருங்கள் பார்ப்போம். அழகான இலையுதிர் காலத்தில், மாலை இளவெயில் நேரத்தில், நீங்கள் வீதியில் நடந்து போகும் பொழுது திடீரென்று பார்த்தால் ஒரு மிகவும் அழகான பெண்ணைஃ ஆணை பார்க்கின்றீர்கள். பார்த்த உடனே வியந்து, உங்களை மறந்துவிடுகின்றீர்கள். என்ன நண்பர்களே? இது என்னடா அரபிக்குத்து பாடலை எடுத்து விடுகின்றேன் என்று யோசிக்கின்றீர்களா?

இல்லை இப்படி ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் எல்லோருமே அனுபவித்து இருப்பீர்கள், சரி தானே? நீங்கள் ஆணாக இருந்தால் ஒரு அழகிய பெண்ணைப் பார்த்தோ அல்லது ஒரு பெண்ணாக இருந்தால் ஒரு ஆணைப் பார்த்தோ வியந்திருப்பீர்கள்.

ஆனால் இதில் ஒரு விஷயத்தை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா? அது என்னவென்றால், ஏன் நமக்கு ஒரு சிலரைப் பார்த்தால் மட்டும் தான் அழகாகவும் கவர்ச்சியாகவும் தெரிகின்றது, ஆனால் வேறு சிலரைப் பார்த்தால் அப்படித் தெரிவதில்லை. இதிலும் ஆச்சரியம் என்னவென்றால், எனக்கு அழகு அல்லது கவர்ச்சியென்று தெரிபவர் உங்களுக்கு அழகாகத் தெரியவேண்டும் என்று அவசியமே கிடையாது. எனவே இதற்குக் காரணம் என்ன? இந்தச் சுவாரசியமான கேள்விக்குப் பதில் தெரியவேண்டும் என்றால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

ஏன் ஒரு குறிப்பிட்ட சிலரை மட்டும் எங்களுக்கு அழகாகவும், கவர்ச்சியாகவும் தெரிகின்றது? ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான இசை மற்றும் பாடல்களைப் பிடிப்பது போல் தான் இதுவும். உதாரணத்திற்கு எனக்கு ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம், அதாவது கௌசல்யா சுப்ரஜா ராம பூர்வா" என்று ஆரம்பிக்கும் அந்தப் பாடல் பிடிக்கும் என்கிற காரணத்தால் உங்களுக்கும் அது பிடிக்க வேண்டுமென்று அர்த்தம் இல்லை தானே? அதே போல் தான் எனக்கு அழகு என்று தோன்றும் பெண் உங்களுக்கும் அழகாக இருக்கத் தேவையில்லை. ஆனால் இதில் கவனிக்கவேண்டிய ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், கவர்ச்சி என்பது உடல் அழகை மட்டும் குறிப்பது இல்லை, அதற்கும் மேலிருக்கிறது. அதைப் பற்றி இன்னும் ஒரு கொஞ்ச நேரத்தில் பார்ப்போம். நாம் நமது மரபணுக்களை, அதாவது புநநௌ ஐ அடுத்த தலைமுறைக்குக் கொடுப்பது என்பது நாம் நமது வாழ்வில் செய்யும் ஒரு மிக முக்கியமான செயல்களில் ஒன்றாகும். இதைச் செய்வதற்கு ஏற்ற துணையைத் தேர்ந்தெடுக்கப் பல வழிகள் உள்ளன. ஒவ்வொரு உயிரினமும் அதன் பண்புகளுக்கு ஏற்றவாறு தனது துணையைத் தேர்வு செய்கின்றது என்று Charles Darwin கூறியுள்ளார். உதாரணமாக ஒரு மயிலை எடுத்துக்கொள்வோம்.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

ஆண் மயிலின் தோகை, வண்ணங்கள், அழகு மற்றும் அவை மிளிரும் தன்மையினைப் பொறுத்து பெண் மயில் கவரப்பட்டு தனக்கான ஆண் மயிலைத் தேர்ந்தெடுக்கும். அது ஏனென்றால் இவையெல்லாம் சரியாக இருந்தால் தான் அந்த ஆண் மயில் நன்றாக வளம்பெற்ற மரபணுக்களையும், நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொண்டிருக்கும். எனவே இவையனைத்தையும் அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கலாம். இதுவே மனிதர்களை எடுத்துக்கொண்டால், நாம் ஏதோ அழகு மற்றும் கவர்ச்சி தான் இனச்சேர்க்கையில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் அவை நமது உடலின் ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்கத் தன்மையை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டும் ஒரு வகையான மொழி மட்டும் தான். வேறொன்றுமே இல்லை.

சரி சரி இது எல்லாமே ஒரு பக்கம் இருக்கட்டும், எனக்கு ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதிலைச் சொல்லிவிடுங்கள். உங்களுக்கு ஒருவரைப் பார்க்கும் போது, அவர் ஏன் அழகாகத் தெரிகிறார்? அட, அவளின் கண்களைப் பிடிக்கின்றதா, அல்லது அவனின் முகம் பிடிக்கின்றதா? நண்பர்களே, உங்களுக்கு ஒன்று தெரியுமா? இதைப் பார்த்துத் தான் நாம் மயங்கிவிடுகின்றோம் என்று நினைக்காதீர்கள். உண்மையில் நமக்கு ஒரு மனிதனைப் பார்த்து அழகு என்று எப்போது சொல்கிறோம் தெரியுமா?

28 ஆம் பக்கம் பார்க்க...




# விமானத்தில் ஒரு இறக்கை!

விமானத்தின் தொழில் நுட்பங்கள் குறித்து தொடர்ந்து வாசித்து வருகிறேன், உண்மையிலேயே எத்தனை பெரிய அறிவியல் கண்டுபிடிப்பு இது, ஒவ்வொரு முறையும் அதை வாசிக்கும் போது வியக்கிறேன். இணையத்திலும் ஆயிரக்கணக்கான காணொளிகள் உள்ளது, ஒவ்வொன்றும் இலச்சக்கணக்கான அறிவியல் அடிப்படைகளை, செய்திகளை சுமந்து நிற்கிறது.


அதை எல்லாம் வாசித்தாலும் இந்த விமானத்தில் ஒற்றை இறக்கையில் இந்த படத்தை பார்க்கும் போது எல்லாம் வயிற்றில் ஏதோ ஒரு கதக் தட்டுப்படுகிறது, இருப்பினும் அதை எல்லாம் தாண்டி நாம் பயணிப்பது அறிவியலின் அடிப்படையிலான விமானம் தானே, புஷ்பக விமானம் அல்லவே என்கிற தைரியத்தில் பறக்கிறேன்...

- முத்துக்கிருஷ்ண அழகர்சாமி

# அபிராமி நாட்டியாஞ்லி - ரேனுகா சுரேஸ் அவர்களின் மாணவி சுருதிகாவின் அரங்கேற்றம் (France)

நான்மறை போற்றும் பரதநாட்டிய மரபுக்கு மத்தியில் “நூலைப்படி“ என்ற அற்புதமான பாரதிதாசன் பாடலை நாட்டியம் செய்த சுருதிகாவின் அரங்கேற்ற நிகழ்வில் கலந்து கொண்டமை மகிழ்வளிக்கிறது.

ஆசிரியர் ரேனுகா சுரேஸ் அவர்களின் நெறியாள்கையில் நடந்தேறிய அரங்கேற்றத்தில் மெய்ப்பாடுகளையும் அடவுகளையும் மிக லாவக





மாகக் கையாண்டிருந்தார் சுருதிகா. பல சமயங்களில் தேர்ந்த, திடமான மெய்ப்பாடுகளை வெளிப்படுத்திய அரங்கநாயகி சுருதிகாவிற்கு எனது வாழ்த்துகள்.

புத்தாக்கம் செய்யப்பட்ட உருப்படிகள் பல இவ் அரங்கேற்றத்தில் இருந்தமை அரங்கிற்கு அணிசேர்த்தது. அத்தோடு அபிராமி நாட்டியாலயாவின் மாணவர்களை உபநட்டுவாங்கத்தில் இணைத்துக் கொண்டதும், அவர்தம் தாளஞானமும் சிறப்பு.அரங்கத்தின் புத்தாக்கங்களில் ஒன்றாக, ராஜ்குமார் பாரதி அவர்களின் இசையமைப்பிலும், ரேனுகா சுரேஸ் மற்றும் திவ்யா.சுஜேன் என்ற இரு நாட்டிய ஆளுமைகளுடைய நடன அமைப்பிலும், யாதவ் யாதவன் அவர்களுடைய தெளிவான குரல்வளத்திலும், முழவும் யாழும் குழலும் என இசைக் கலைஞர்களின் இயைவோடு நாட்டியவடிவம் கொடுக்கப்பட்ட ”நூலைப்படி” பாடலைப் பற்றி பேச விரும்புகிறேன்.

அபிநயாஞ்சலி நாட்டியப்பள்ளியின் எதிர்வரும் கலைப்பபடைப்புகளுக்கு இந்நாட்டியம் ஒரு முத்தாய்ப்பாய் என்பது என் கணிப்பு. நாட்டிய அரங்குகளில் மகாகவி பாரதியாருடைய பாடல்கள் பாவிக்கப்பட்ட அளவு புரட்சிக்கவி பாரதிதாசனுடைய பாடல்கள் எடுத்தாளப்பட்டதில்லை. இந்த அரங்கில் பாரதிதாசன் கவிதையோடு பாரதியின் தமிழ்முழக்கம் வரிகளும் கவித்துவமாக இணைக்கப்பட்டிருந்தமை நாட்டியத்திற்கு மேலும் அழகு சேர்த்தது.

அரங்கேற்றத்தின் அணிசேர் கலைஞர்கள் இளைய தலைமுறை. எங்கள் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கை.

வாழ்த்துகள்.

**நூலைப்படி –– சங்கத்தமிழ்**
**நூலைப்படி –– முறைப்படி**
**நூலைப்படி**
**காலையிற்படி கடும்பகல்படி**
**மாலை, இரவு பொருள்படும் படி**
**நூலைப்படி**

பாரதிதாசன் தனது பாடலில் நூலைப்படி என்று வெறுமாகக் சொல்லவில்லை, குறிப்பாக சங்கத்தமிழ் நூலைக் குறிப்பிட்டுச் சொல்வது குறிப்பிடத்தக்கது. அதையும் முறைப்படி, பொருள் விளங்கும் படி படிக்கச் சொல்கிறார். தொல்காப்பியம் தொடங்கி, சங்கக்கவிதைகள், சங்கமருவிய காலத்துக் காப்பியங்கள் வரையான நூல்களைக் கைகாட்டுகிறார். தொல்காப்பியத்திற்கும், சங்கக்கவிதைகளுக்கும் அத்தனை முக்கியத்துவம் ஏன்? எல்லாமொழிகளும் சிறந்தனவே. உலகின் அனைத்து மொழிகளுக்கும் இலக்கண நூல் இருப்பது வழமையே. ஆனாலும் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தினைச் சிறப்புமிக்கதாக கூறுவதற்குக் காரணமுண்டு.

இலக்கண நூல்களிலே எழுத்தும், சொல்லுமே அடிப்படை. தொல்காப்பியம் ஒன்றுதான் எழுத்தும் சொல்லும் கடந்து, பொருளுக்கும் இலக்கணம் சொல்கிறது.



எழுத்தினதும் சொல்லினதும் கட்டமைப்பினை ஆய்வது போல பொருளினதும் கட்டமைப்பை ஆய்ந்திருக்கும் அணுகுமுறை யானது தொல்காப்பியத்தைப் பிற இலக்கணநூல்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இது தொல்காப்பித்திற்கான தனித்தன்மையுமாகும். பொருளுக்கு இலக்கணம் செய்ததென்பது மனிதனுடைய மனதின் அடிப்படை மூலகூறுகளின் விதி களை ஒழுங்கு படுத்திக் காட்டுவதாகும். மனித மனவெளிப்பாடுகளோ பல



வித மானவை. ஒரு மனதைப் போல மற்றொரு மனம் இருப்ப தில்லை. மனம் பல்வேறு வகை பட்டு விரிந்து கொண்டே செல்பவை. இப்படியாகப் பெரும் பரப்பைக் கொண்டு இயங்கும் மனித மனங்களிற்கு இலக்கணம் வகுப்பதென்பது சவால்கள் நிறைந்தது.

அதைச் தொல்காப்பியம் செய்திருக்கிறது. மனிதமன இயங்கியலின் அடிப்படைப் பற்றி மற்றொரு பதிவில் பார்ப்போம்.

மேலும் நூலைப்படி கவிதையில்:

**பொய்யிலே முக்காற்படி**
**புரட்டிலே காற்படி**
**வையகம் ஏமாறும்படி**
**வைத்துள்ளநூற்களை**
**ஒப்புவதெப்படி – நூலைப்படி!**

வாசிப்பில் மூல நூற்களைப் படிப்பது இன்றியமையாதது. இன்றைய காலத்தில் கொட்டிக்கிடக்கும் நூல்கள் அனைத்தையும் வாசிப்பதென்பது சாத்தியமற்றது. ஒரு நூலின் சிறப்பை அறிந்து கொள்ள நமக்கு அளவுகோல் ஒன்று அவசியப்படுகின்றது.

மூலநூல்களை வாசிப்பதன் மூலம் நான் மற்றைய நூல்களை ஒப்புநோக்கி சிறந்த நூல்களைக் கண்டடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டியத்தில் பாரதிதாசன்

இந்தியா காலனியத் திடமிருந்து விடுதலை நோக்கிச் சென்ற காலத்தில் மகா கவி சுதந்திரப்பா டல்களை, அண்டத்தின் ஆற்றல்களை, ஆன்மீகப் பாடல்களை, எழுதியவர். பாரதிதாசனோ விடுதலை யின் பின்னரான சமூகச் சீர் திருத்தம், பகுத்தறிவு, நற்சிந்தனை போன்ற விடயங்களைக் கை யாண்டவர்.

பரதநாட்டியக் கலைக்கும் சீர்திருத்தம் பகுத்தறிவுவாதம் என்பவைக்கும் இடையில் ஒருவித ஒட்டாதநிலை இருந்து வருவதை கலைஞர்கள் அறிவர். அதன் காரணமாகவே நாட் டிய உலகில் பாரதி தாசன் கண்டு கொள்ள ப்படாமல் போயிருக்கக்கூடும். இவ் இடைவெளியை நிறப்ப பலமுயற்சிகள் நடந்தாலும், சென்ற நுற்றாண்டுகளில் தஞ்சை நால்வர், ருக்மணி போன்றவர்கள் சீர்திருத்தமாக எடுத்துக்கொண்ட பேசு பொருள் மட்டுமே இன்றும் பரதக்கலையாகும் என்ற கருத்து, பெரும்பான்மை பரதக்கலைஞர்கள் மனதில் ஆழவேறூன்றிய ஒன்றாகவே காணப்படுகிறது.

பரதக்கலை பல நூற்றாண்டுகளாக பல மாற்றங்களை, ஏற்ற இறக்கங்களை சந்தித்துள்ளது. சமூகத்தின் தேவைக்கேற்ப தன்னை மாற்றியமைத்து வளர்ந்துள்ளது. அது ஒரு காலத்தில் தேங்கிவிடாது மேலும் வளர்த்துச் செல்வதும், நாட்டியக் கலைஞர்களை படைப்பாளிகளாக ஆக்குவ

கவிதா லட்சுமி (நோர்வே)



தும் நாட்டியக்கலைக்கு நாம் செய்யும் பெரும் தொண்டே. நாட்டியசாஸ்திரம் போன்ற வடமொழி நூற்களைத் தாண்டியும் நூற்கள் இருக்கின்றன. கலை பற்றிய கருத்துக்களையும், அறம் சார்ந்த தமிழ்ச்சிந்தனை மரபுகளையும் ஆழமாக எடுத்தியம்பகின்றன.

**அகப்பொருள் படி அதன்படி**
**புறப்பொருள் படி நல்லபடி**
**புகப் புகப் படிப்படியாய்ப்**
**புலமை வரும் என்சொற்படி நூலைப்படி**

**தொடங்கையில் வருந்தும்படி**
**இருப்பினும் ஊன்றிப்படி**
**அடங்கா இன்பம் மறுபடி**
**ஆகும்என்ற ஆன்றோர் சொற்படி**

நூலைப்படி!



# வாழ்கின்ற போதே தனியாகவும் வாழ உங்களைத் தயார்ப் படுத்துங்கள்!



கௌசி சிவபாலன்
(யேர்மனி)

இந்தப் பிரபஞ்சத்தைப் பாருங்கள் ஓடிக் கொண்டே இருக்கிறது. நட்சத்திரங்கள், கிரகங்கள் என்பன முடிவில்லாத பயணத்தை மேற்கொண்டு இருக்கின்றன. இது எப்போது தோன்றியது? எங்கு முடியும்? என்பது அனுமானமே. எங்களுடைய பால்வீதி மண்டலத்திலுள்ள சூரியக் குடும்பத்தில் சூரியனைச் சுற்றிச் சுற்றி வரும் கிரகங்களில் ஒன்றுதான் பூமியும். சூரியன் தன் கவரச்சிக்குள் பூமியை வைத்திருக்கின்றது. பூமியும் தன்னுடைய ஈர்ப்பு சக்தியினாலே சூரியனை நெருங்காது ஒரு வட்டப்பாதையில் சுற்றிக் கொண்டிருக்கின்றது என்று சொல்லலாம். பூமியானது எங்களுடைய பால்வீதி மண்டலத்தில் மனிதன் வாழக்கூடிய சாத்தியக் கூறுகள் கொண்ட ஒரே கிரகமாக இன்றுவரை காணப்படுகின்றது. ஆனால், அகண்டு விரிந்து பரந்த பிரபஞ்சத்தில் மனிதன் வாழுகின்ற சாத்தியக்கூறுள்ள ஒரு கிரகத்தைத் தேடி விஞ்ஞானிகள் முயற்சி மேற்கொண்டிருக்கின்றார்கள். இந்த முன்னுரையை வைத்துக் கொண்டு கட்டுரைக்குள் செல்வோம்.

ஒரு குடும்பத்தில் ஈர்ப்பு சக்தி இருக்கும் வரை அந்தக் குடும்பம் ஒன்றை ஒன்று கவர்ந்து ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்ந்து கொண்டே இருக்கும். அக்குடும்பத்தின் அங்கத்தவர்கள் தம்முடைய வாழ்க்கையைச் செலுத்திக் கொண்டே இருக்கின்றார்கள். கணவனைப் பிரிய முடியாத மனைவியும், மனைவி இல்லாது வாழ முடியாது என்று சொல்லும் கணவனும், பெற்றோர் இல்லாமல் இயங்க முடியாத பிள்ளைகளும் என ஒரு இறுக்கமான சங்கிலியைப் பிணைத்து வாழ்ந்து வருகின்றார்கள். பிறந்ததில் இருந்து மனிதன் என்பவன் இறப்பை நோக்கியே பயணம் மேற்கொள்கின்றான். கணவன், மனைவி, பிள்ளை இணைந்த குடும்ப பந்தத்திலே ஈர்ப்பு குறைகின்ற போது அக்குடும்பத்தில் இருந்து பிரித்தெடுத்து வெளியே வீசப்படுவது இயல்பு. ஆனால், வீசப்பட்டாலும் தனித்து வாழக்கூடிய பிரபஞ்ச அமைப்புக்கேற்ற குடும்ப அமைப்பு முறையும் அமைய வேண்டியது அவசியம். வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. ஒருமுறை வாழுகின்ற இந்த வாழ்க்கையை எமக்காகவும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

எமது இலங்கை மக்கள் நோர்வே, ஜெர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து போன்ற நாடுகளுக்குப் புலம் பெயர்ந்திருக்கின்றார்கள். அங்கு புரியாத கலாச்சார அமைப்பிலும், மொழியிலும் வேற்றுக் கிரகவாசிகள் போல வாழ்ந்து தம்மைத் தாம் வாழுகின்ற நாட்டிற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளுகின்றார்கள். அதுவரை கணவனும் மனைவினும் தம்மை ஒரு இறுக்கமான கட்டமைப்புக்குள் வைத்துக் கொண்டே வாழ்க்கையை நடத்தத் தொடங்கினார்கள். ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டிய கட்டாய சூழ்நிலை இருந்தது. இருவரும் வேலைக்குப் போக வேண்டும். இருவரும் பணம் சம்பாதிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் கணவன் வேலைக்குச் சென்று வர மனைவி குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும் என்பது அவசியமாக இருந்தது. இது ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ வேண்டிய சூழலை ஏற்படுத்தியது. இதுவே எம்முடைய மரபணுக்களும் கற்பிக்கின்றன. காலம் காலமாகப் பெண் சமையல், பிள்ளை வளர்ப்பு என்று குடும்பப் பாரத்தைச் சுமக்கக் கணவன் வெளியில் சென்று பொருளீட்டி வருகின்றான். இதுவே சங்ககாலம் தொட்டு தொடர்ந்து வந்தது.

> **“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கம்**
> **மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
> **விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
> **பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்“**
>
> **என பெண்களை அகநானூறு சுட்டுகின்றது.**
> **“வினையே ஆடவர்க்குயிரே மனையுறை**
> **மகளிர்க்குஆடவர் உயிரென;**

என ஆண்கள் கடமை கூறுகின்றது.

இவ்வாறுதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் கடமைகள் வகுக்கப்பட்டன.

ஆனால், புலம் பெயர்ந்து வாழத் தொடங்கிய ஆண், பெண் உள்ளிட்ட குடும்பத்தில் காலம் நகர்கிறது. வாழ்க்கைத் தரம் உயர்கிறது. மொழி இலகுவாகிறது. வாழுகின்ற நாட்டின் சுதந்திரம் கற்றுக் கொள்ளப்படுகிறது. இதனால், சுயமாக வாழக் கூடிய தன்மையை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளுகின்றார்கள். ஒரு பெண் ஆண் இல்லாமலும் தன்னால் தனித்து வாழ முடியும் என்ற நிலைக்கு ஆளாகின்றாள். ஆணும் பெண் இல்லாவிட்டாலும் தன்னால் வாழ முடியும் என்ற நிலைக்கு ஆளாகின்றான். மனிதன் என்பவன் தனியாகப் பிறக்கின்றான். எவ்வித எதிர்பார்ப்புக்களும் இன்றி பிறக்கின்ற போது பெற்றோரே பிள்ளைகளைத் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வளர்த்தெடுக்கின்றார்கள். ஆனால், காலப்போக்கில் அவர்கள் தனியே வாழக்கூடிய தைரியத்தைக் கொடுக்க வேண்டிய அவசியம் பெற்றோர்களுக்கு இருக்கின்றது. குருவிக் குஞ்சுகளுக்குச் சிறகு முறைக்கும் வரைக் கூட்டுக்குள் வைத்திருந்து உணவூட்டிப் பாதுகாக்கும் குருவிகள், சிறகு முளைத்து விட்டால், வெளியே தள்ளிவிடுகின்றது. அக்குஞ்சுகளும் தனியே தம்முடைய சிறகுகளை விரித்துப் பறக்கத் தொடங்குகின்றன. அதேபோல் ஜெர்மனியர், தம்முடைய

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





# யேர்மனியில் செல்விகள் கலைவாணி ரவினா ரவீந்திரசிவம் அவர்களின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம்





12.10.2024அன்று ஜெர்மனி எசன் நகரில் இடம்பெற்ற எசன் நுண்கலைக் கல்லூரி (TCFA) இசை ஆசிரியை இசைக் கலைமணி ஞானாம்பாள் விஜயகுமார் அவர்களின் மாணவிகளான செல்விகள் கலைவாணி, ரவினா ரவீந்திரசிவம் அவர்களின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் மண்டபம் நிறைத்த இசை ரசிகர்கள், கலை ஆசிரியர்கள் முன்னிலையில் சிறப்பாகநடந்தேறியது. அணிசேர் கலைஞர்களாக மிருத்தங்க வித்து வான் அனுஷாந்த், கடம், மிருதங்க வித்துவான் நகுஷாந்த்,வயலின் இசைக் கலாவித்தகர் சஜினி நயினை விஜயன், கெஞ்சிரா மிருத்தங்க வித்வான் ராகுலன் ராமநாதன், தம்புரா நடன ஆசிரியை ஹறிணிதா சுந்தரலிங்கம் ஆகியோர் தமது சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

பிரதம விருந்தினராக சங்கீத பூஷணம், திருமதி. கலைவாணி ஏகானந்தராஜா அவர்கள் இந் நிகழ்வு குறித்து மதிப்பீட்டுரையை சிறப்பாக தொகுத்தளித்து வாழ்த்தினார். பெற்றோர்களான திரு. திருமதி. ரவீந்திரசிவம் கலையரசி தம்பதிகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.நிகழ்ச்சித் தொகுப்பை தமிழருவி வானொலி நயினை விஜயன் அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பித்து இனிதாக நிகழ்ச்சியை நகர்த்தி நிறைவு செய்திருந்தார்.





# தேசியமட்ட பெண்கள் உதைபந்தாட்டத்தில் மகாஜனா இரு அணிகளும் சாம்பியன்கள்



**தொடர்ச்சியாக 2022, 2023, 2024 என 3 வருடங்கள் சாம்பியனாகி வரலாற்றுப்பதிவை ஏற்படுத்தியுள்ளது.**

தேசியமட்ட பாடசாலைகளுக்க டையிலான பெண்கள் உதைபந் தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் 17, 20 வயது அணிகள் இரண்டும் சாம்பிய ன்களாகி கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளன.

குயின்சி தலைமையிலான 20 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் பொலனறுவை பென்டிவெல கல்லூரியை எதி ர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது. முதல்பாதி ஆட்டத்தில் லயன்சிகா, அணித்தலைவி குயின்சி ஆகி யோரது கோல்களுடன் 2:0 என மகாஜனா முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் லயன்சிகா, குயின்சி ஆகியோர் அதிரடியாக ஒவ்வொரு கோல்களை பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சாம்பியனாகியது.

உமாசங்கவி தலைமையிலான 17 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது. முதல்பாதி ஆட்டத்தில் அணித்த லைவி உமாசங்கவி, கல்சிகா ஆகி யோரது கோல்களுடன் 2:0 என மகாஜனா முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் உமாசங்கவி, கியூஸ்ரிகா ஆகியோர் அதிரடியாக ஒவ்வொரு கோல் களை பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சாம்பியனாகியது.

17 வயதுப் பெண்கள் அணி தொடர்ச்சியாக 2022, 2023, 2024 என 3 வருடங்கள் சாம்பிய னாகி வரலாற்றுப்பதிவை ஏற்படுத் தியுள்ளது. அத்தோடு 17 வயதுப் பெண்கள் அணிக்கு 2022 ஆம் ஆண்டுதான் போட்டி ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் வலயமட்டம், மாகாண மட்டம், தேசியமட்டம் என சாம்பிய னாகி சாதனைபடைத்துள்ளது. 20 வயது அணி 2019, 2022, 2024 என 3 வருடங்கள் சாம்பியனாகிய தோடு 2023 இல் இறுதியாட்டத்தில் மோதி இரண்டாமிடம் பெற்றது. (2020, 2021 களில் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக போட் டிகள் நடைபெறவில்லை)

வெற்றி வீராங்கனைகளை வாழ்த் திப்பாராட்டுவதோடு, வழிப்படுத்திய அதிபர், நெறிப்படுத்திய விளை யாட்டுத்துறை முதல்வர், அணிப் பொறுப்பாசிரியர்கள், வெற்றிக்கு வித்திட்ட பயிற்றுநர் ஆகியோரை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.



17 வயது அணித்தலைவி உமாசங்கவி



20 வயது அணித்தலைவி குயின்சி




# இலங்கைப் பெண்கள் தேசிய உதைபந்தாட்ட அணியில் மகாஜனன்கள் மூவர்

தெற்காசிய மகளிர் உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத் தொடரில் பங்குபற்றும் இலங்கைப் பெண்கள் தேசிய அணி யில் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்ட வீராங்கனைகள் மூவர் இடம்பிடித்து வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியுள்ளனர்.

பாஸ்கரன் சானு, சிவநேசன் தர்மிகா, சுரேந்திரன் கௌரி ஆகிய மகாஜனன்களே தேசிய அணியில் இடம்பிடித்துள்ள னர். இத்தொடர் நேபாளத்தில் கடந்த மாதம் (ஒக்டோபர்) 17 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இவர்கள் மூவரும் பாடசாலை உதைபந்தாட்ட அணிகளுக்கு தலைமைதாங்கியதோடு, பாடசாலைப் பருவத்தில் வயதுப் பிரிவுகளுக்கான தேசிய அணிகளிலும் இடம்பிடித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சால் நடாத்தப்படுகின்ற பாடசாலைமட்ட உதைகந்தாட்டத்தில் மகாஜனக் கல்லூரி 20 வயதுப பெண்கள் அணி 2019 இல் முதன்முறையாக சாம்பியன்பட்டம் வென்ற போது, தர்மிகா அணித்தலைவியாகவும் கௌரி அணி உப தலைவியாகவும் சானு முன்னாள் அணித்தலைவியாகவும் சிறந்த பங்களிப்பை நல்கினர்.

**இவர்கள் மூவருக்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.**



தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

தாயகத்திலிருந்து வெளிவரும் தமிழர் பொருண்மியம்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பெற்றுக் கொள்ள QR code இனை scan செய்து whatsapp குழுவில் இணையுங்கள்

+94 777 304 010
+94 70 267 5575





# எமக்கு மட்டும் இப்படி நடக்கின்றதே!

## விழுவதெல்லாம் எழுவதற்கே

பரந்து விரிந்த உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்குமே தோல்வியும், விரக்தியும், வலிகளும் பொதுவானவை. அவை அனைத்துமே ஏதோவோர் வெற்றியின் முதல்படியாகும்.முயற்சித்துக் கொண்டே இருப்பவர்களுக்கு மட்டுமே இது பொருந்துமேயன்றி விழுந்துகிடப்பவர்களுக்கு இது பொருந்தாது.

எந்த ஒரு முயற்சியுமே வெற்றியில் முடிவதில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே அந்த நற்பேறு இருக்கும். பெரும்பாலானோருக்குத் தோல்வியின் முகவரி கண்டே வெற்றிகள் வந்து சேர்கின்றது.

சிறு குழந்தை கூட நடை பயில்கையில் பல முறை விழுந்தே எழுகிறது.ஆனால் ஒவ்வொரு முறையும் எழுந்து நிற்கும் விடா முயற்சியே அதற்கு நடக்கக் கற்றுக்கொடுக்கிறது. அதுபோன்றே வாழ்க்கையும். விழும்போதெல்லாம் எழுவதற்குப் பழகிக் கொள்வோமானால் அது நாம் தேடும் வெற்றியைப் பரிசளிக்கும். தோல்வியென்பது எம் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.ஒரு செயலில் ஏற்படும் தோல்வியானது பட்டறிவாக மாறுகின்றது.அந்தப் பட்டறிவைக் கொண்டு எங்கே தவறிழைத்தோமெனக் கண்டுணர்ந்து அவற்றைத் திருத்திக் கொண்டு வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும்.இதுவே சவால்களை எதிர்கொள்ளவும்,நம் திறமைகளை வளர்க்கவும் காரணமாகிறது. வீழ்ந்த பின்னும் எழுந்து நிற்கும் உளப் பக்குவம்தான் வெற்றியாளர்களை உருவாக்குகிறது.தொடர் முயற்சியும்,உள உறுதியும், நம்பிக்கையுமே வெற்றியின் படிக்கட்டுகள்.

மாபெரும் அறிவியலாளர் தாமஸ் அல்வா எடிசன், பல ஆயிரம் முறைகள் தோல்வியடைந்த பின்னர் தான் மின் விளக்கை கண்டுபிடித்தார். அவர் சொல்லிய ஒன்று “நான் தோல்வியடைந்தது இல்லை, மாறாக அந்த முயற்சி செயல்படாத பல்வேறு வழிகளை கண்டறிந்தேன்“ என்பதே.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

முன்னாள் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஒரு சிறந்த உதாரணம். அவர் தனது வாழ்நாளில் அரசியலிலும், தனிப்பட்ட வாழ்விலும் பல தடைகளை சந்தித்தார். பல முறை தோல்வியுற்றார், ஆனால் தன்னம்பிக்கை மற்றும் உறு தியின் மூலம் அவர் மறுமுறை எழுந்து, உலகின் சிறந்த தலைவர்களில் ஒருவராக வளர்ந்தார். அவரது வாழ்க்கை வரலாறுஅனைவருக்கும்ஒருஉதாரணமாகவிளங்குகிறது. யாரோ ஒரு தாமஸ் அல்வா எடிசன்,ஆபிரகாம் லிங்கனோ தேவையில்லை. உங்களைப் பெற்றவர்கள், உங்களோடு உடன் பயணிப்பவர்கள், நீங்கள் அறிந்தவர்கள என எல்லோருமே பல தடைகளைத் தாண்டி எழுந்தவர்கள் தான்.இதை எழுதுகின்ற நானே என்னைப் பொறுத்தவரையில் எனக்கு ஒரு எடுத்துக்காட்டுதான். இதைப் படித்துக்கொண்டிருக்கும் நீங்களும் மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டுதான். எமக்கு மட்டும் இப்படி நடக்கின்றதே என நீங்கள் வருந்திய அனைத்துக் காரணங்களையும் இப்போது நினைத்துப் பாருங்கள்.அத்தனையில் இருந்தும் நீங்கள் மீண்டு வந்த தருணங்களை எண்ணிப் பாருங்கள். நீங்கள் எத்தனை தடவைகள் எழுந்திருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு விளங்கும்.

நாம் விழுந்துவிட்டோம் என நினைத்தவுடன், அதற்கும் மேலாக மீண்டும் எழுவதற்கான உற்சாகத்தை பெறுவது மிகவும் கடினமான செயலாக இருக்கலாம். ஆனால், எழுந்து நிற்கும் மனப்பக்குவம் நமக்கு மனவலிமையையும், முன்னேறுவதற்கான தைரியத்தையும் தருகிறது. தோல்வியை வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வது முக்கியம். அதை குறையாக நினைத்து

28 ஆம் பக்கம் பார்க்க...







# மூத்தோருக்கு விருந்தும் மருந்தும்

கடந்த 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை நகரில் 4ம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ராஜா ராணி சேவை இல்லத்தில் முதியோர், தினம் வெகுவிமரிசையாக கலாபூஷணம் திரு இருதயராஜா (நிறுவுனர் ராஜா ராணி சேவை இல்லம்)தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இவ்விழாவில் காலை நிகழ்வாக டாக்டர் மனோகரன் தலைமையில் சுகாதாரம் சம்பந்தமான மருத்துவப் பரிசோதனைகளும், ஆலோசனைகளும், முதியோருக்கு காலை உணவாக சத்துணவுக் கஞ்சி பரிமாறப்பட்டதுடன், முதியோர் பங்கேற்ற பல நிகழ்வுகளும்,யோகாசன பயிற்சியும் இடம்பெற்றன.

இவ்விழாவின் மதிய உணவை மூத்தோருக்கு திரு,திருமதி யோ,சாந்தி தெய்வேந்திரன் இலண்டன் /இலங்கை (Lions club of London Belmont...MJF) வழங்கினர்.

மூத்தோருக்கு உணவே மருந்தாக, ஆரோக்கியமான உணவும், உடலுக்கு வேண்டிய பயிற்சியும், அவர்களது மன அழுத்தங்கள் குறைய இப்படியான ஒன்றுகூடல்களும்,பெரிதும் உதவும். இந்த உதவிகள் யாவற்றிலும் மேலானது. வெற்றிமணி யின் வாழ்த்துகள்.




Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540



# மாற்றத்தின் முன்னோடிகள் நாங்களாக அல்லவா இருந்திருக்க வேண்டும்?

## மாற்றத்தின் முன்னோடிகள்

அலை அடிக்கும் போது, வழியில் நிற்கும் நாணல், கஞ்சல், குப்பை எல்லாவற்றையும் அலை அடித்துக் கொண்டு போகும். ஆனால், ஆழ வேரூன்றிய ஆலமரம் மட்டும் அசையாமல், அலையின் போக்கை சிரித்து ரசித்துக் கொண்டு நிற்கும். அரசியல் அலையும் அப்படித் தான்.

இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மட்டுமல்ல, தமிழர்கள் செறிந்து வாழும் புலம்பெயர் தேசங்களிலும் ஜேவிபியின் "மாற்றம்" அலை அடிக்கிறது. இருமுறை ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டுத் தோற்ற ஜேவிபி இயக்கத்தின் அனுரகுமார திஸநாயக்க, ஜனாதிபதி தேர்தலில் வென்றதும், அவர் அடுத்தடுத்து நிகழ்த்தும் அதிரடி நடவடிக்கைகளையும், ஊழலற்ற தூய ஆட்சி பற்றி ஜேவிபி எடுக்கும் வகுப்புகளையும் சமூக வலைத் தளங்கள் எங்கும் எம்மவர்கள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், 35 ஆண்டுகளிற்கு முன்னர் எங்கள் மத்தியில் இருந்த ஒரு ஆயுதப் போராட்ட இயக்கம், இன்று ஜேவிபி செய்து கொண்டிருக்கும் அத்தனையையும், தமிழ் மக்களிற்கு செய்ய முனைந்து, அதில் முதல் வெற்றியையும் பெற்றது என்பதையும் நாங்கள் மறந்து விட்டோமா? மாற்றத்தின் முன்னோடிகள் நாங்களாக அல்லவா இருந்திருக்க வேண்டும்?



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

ஜேவிபி எவ்வாறு சிங்கள தேசிய சோஷலிச சித்தாந்தத்தில் ஊறிப் போன இயக்கமோ, அதே போன்று, தமிழ் தேசிய சோஷலிச சித்தாந்தம் நிலை நின்ற ஈரோஸ் எனும் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கம், 1989 பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 11 ஆசனங்களையும், தேசிய பட்டியலில் ஒரு ஆசனத்தையும் வென்று, மூன்றாவது பெருங்கட்சியாக இலங்கை பாராளுமன்றத்தில் நுழைந்தது.

1977 பொதுத் தேர்தலில் "அடைந்தால் தமிழீழம் இன்றேல் சுடுகாடு" என்று கோஷமிட்டுக் கொண்டு, வடக்கு கிழக்கில் இருந்து பெருவாரியாகத் தெரிவான தமிழர் விடுதலைக் கூட்டணியினரில் நம்பிக்கையிழந்த தமிழ் மக்கள், இந்திய படையினரனதும் அதனோடு இணைந்து கொடூரங்கள் புரிந்து கொண்டிருந்த ஈபி, டெலோ, ஈன்டிஎல்எஃப் இயக்கத்தினரது அடக்குமுறைக்கு மத்தியிலும், நடாத்திக் காட்டிய மாற்றம் தான், 1989 தேர்தலில் ஈரோஸ் இயக்கம் நிகழ்த்திய அரசியல் மாற்றம் அடைந்த வெற்றி.

1989 தேர்தலில், வடக்கு கிழக்கில், இந் திய அரசின் வற்புறுத்தலின் பேரில், தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியானது, ஈபி, டெலோ, ஈன்டிஎல்எஃப் இயக்கங்களோடு தேர்தல் கூட்டணி அமைத்து, உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டது. இந்த மூன்று இயக்கங்களும் அன்று ஆயுதம் தரித்த ஒட்டுக் குழுக்களாக இந்திய படையினருடன் சேர்ந்து மக்களை வாட்டி வதைத்து கொண்டிருந்த காலமது. த்ரீ ஸ்டார்ஸ், மண்டையன் குழு போன்ற பதங்கள் மக்களை நடுநடுங்க வைத்த காலங்கள் அவை.

கூட்டணியின் 1977 தேர்தல் நாயகர்களான யோகேஸ்வரன், சிவசிதம்பரம், ஆனந்த சங்கரி ஆகியோர் யாழ்ப்பாணத்திலும், அமிர்தலிங்கம் மட்டக்களப்பிலும் போட்டியிட்டார்கள்."இரத்த கறை படிந்த கைகளுடன் இணைந்து பிரசாரம் செய்ய மாட்டோம்" என்று அறிக்கை விட்டுவிட்டு யாழ்ப்பாணம் வந்திறங்கிய கூட்டணி காரருக்கு அஷோக் ஹோட்டலை விட்டு வெளில வரப் பயம். ஒரு பக்கம் இயக்கம், மறு பக்கம் மண்டையன் குழு யாரு எப்ப எங்க வைத்து போடுவாங்கள் என்று கிலியும் பயமும் அவர்களை அசோகா ஹோட்டலிற்குள் முடக்கியது. தங்களுக்கு பிரசாரம் தேவையில்லை, சனம் எங்களுக்கு தான் எப்படியும் புள்ளடி போடும் என்ற இறுமாப்பிலும், போன தேர்தலில் வென்ற ஆணவத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சாரங்களில் கூட்டணி இறங்கியது.


யாழ்ப்பாணத்தை கலக்கத்தில் வைத்திருந்த ஈபிகாரன்கள் தான் தேர்தல் பிரச்சாரத்தில் கலக்கினாங்கள். யாழ்ப்பாணத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன், யோகசங்கரி ஆகியோரோடு யாழ் இந்துவில் பணியாற்றிய நவரத்தினம் யாழில் தேர்தலில் போட்டியிட, மூலை முடுக்கெல்லாம் ஈபியின் போஸ்டர், லவுட் ஸபீக்கர் அலறல், பிரச்சார கூட்டங்கள், பத்திரிகை விளம்பரம், இலவச சாராயம் என்று ஒரு முழு அளவிலான பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. தில்லு முல்லு பண்ணி 99.7% வாக்குகளுடன் கைப்பற்றிய ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை வேறு ஈபியின் கையில் இருந்ததால், ஈபிக்காரன்கள், செய்து கொண்டிருந்த கொடூரங்களைப் போல, தேர்தல் பிரச்சாரத்தில் ஒரு காட்டு காட்டினாங்கள்.



இயக்கம் தேர்தலைப் பகீஷ்கரிக்குமாறும், தேர்தலில் பங்குபற்றுவோர் துரோகிகள் என்றும் அறிக்கை விட்டது. நியமன பத்திரங்கள் கையளிப்பதற்கான கடைசி நாளில், அவ்வளவு நாளும் அமைதி காத்த ஈரோஸ் இயக்கம், வன்னிக் காட்டுக்குள் இருந்து பச்சை சிக்னல் கிடைத்ததும், சுயேட்சை குழுவாக வடக்கு கிழக்கில் தேர்தலில் களமிறங்கியது. இயக்கத்தின் மறைமுக ஆதரவுடன், இந்திய சார்பு கட்சிகள் பாராளுமன்றம் செல்வதை தடுக்கும் நோக்கத்துடனும், இந்தக் கடைசி நிமிட நகர்வு மேற்கொள்ளப்பட்டது. வெளிச்சவீடு சின்னத்தில் போட்டியிட்ட ஈரோஸ் இயக்கம், ஈபிக்காரன்களின் அச்சுறுத்தல்களிற்கு பயந்தோ என்னவோ, தேர்தல் பிரச்சாரத்தில் அடக்கியே வாசி-த்தது. அவங்கள் காட்டும் திசையில் தான் சனம் வாக்களிக்கும் என்பதையும் ஈரோஸ் இயக்கம் நன்கே அறிந்திருந்தது. தேர்தல் முடிவுகள் வெளியான போது, வடக்கு கிழக்கு எங்கும் மாற்றத்தின் சின்னமான வெளிச்ச வீடு பிரகாசித்தது.

27 ஆம் பக்கம் பார்க்க...






வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாள குல 30 வயது பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி மணமகனை தற்போதைய பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

யேர்மனியில் Wirtschaftsingenieurin ஆக படிப்பை நிறைவு செய்த 35 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும் பெற்றோர்
தொடர்புகளுக்கு: 4915774318528


MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in

# இது ஓர் உன்னதமான காவியம்

இந்தப் புத்தகம் மிகவும் முக்கியமான அறிமுகப் பகுதியிலிருந்து தொடங்குகிறது. இதில் பிரேம் ராவத் பிறப்பிலிருந்து தன்னுடைய வாழ்க்கையை விவரிக்கும்போது ஒரு புதிய கண்ணோட்டத்தோடு நாமும் அவரோடு பயணிக்க நமக்கு ஓர் அழைப்பை விடுக்கிறார். நாம் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு செல்லும்போது பல வித்தியாசமான கருத்துக்களையும், எண்ணங்களையும் உணர்கிறோம். இது

**கலாநிதி சூர்யநாராயணன்**

ஓர் அலாதியான அனுபவமாக இருக்கி றது. இந்த பயணத்தில் பல மிகவும் அருமையான கவிதைகளையும் பெரியோர்கள் எழுதிய பொன் மொழிகளையும் சுவைத்துக்கொண்டு செல்கிறோம். பிறகு பல கதைகளையும் நாம் கேட்கிறோம். மிகவும் புல்லரிப்பான அனுபவமாக இருக்கிறது.




நாம் ஒவ்வொரு அத்தியாயமாக பார்த்துக் கொண்டுவரும்போது அவர் வட இந்தியாவில் செண்பக மரத்தடியிலே தன்னுடைய

மிகவும் அற்புதமான ஓர் அனுபவத்தைப் பற்றி விவரிக்கையில் நாம் அதிலே இணைந்து விட முடியுமா என்று ஆவலோடு இருக்கிறோம். பிறகு அவர் சென்ற பல நாடுகளுக்கும் கூட்டிக்கொண்டு செல்கிறார். பல நிகழ்ச்சிகளுக்கு நடுவே தென் அமெரிக்காவில் அவர் இருக்கும்போது மனைவி மிகவும் தீவிரமாக நோய்வாய்ப்பட்டிருக்கையில் அந்த மிகவும் இக்கட்டான நிலையிலே நாம் எல்லோரும் தத்தளித்திருப்போம். அவர் எப்படி நிலவரத்தைச் சமாளித்து, குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு அதே நேரத்திலே நிகழ்ச்சிகளை நடத்திக்

கொண்டிருந்தார் என்பதையும் நாம் பார்க்கையில் உள்ளம் நெகிழ்கிறோம் நமக்கோர் படிப்பினை. இந்த புத்தகத்திலிருந்து இவ்வாறு பல விஷயங்களை நாம் கற்றுக் கொண்டே போகிறோம். அவர் நம் உலகத்தின் நிலையை விளக்கும்போது அணையாமல் இயங்கும் சாதனங்கள், காணாமல் போன மகிழ்ச்சி, திருடர்களின் கும்பல் என்றெல்லாம் சொல்லும்போது அதிர்ச்சி அடைகிறோம். பின்னர் அவர் மெல்லென நம் வாழ்க்கையின் மையத்தில் இருக்கும் லயத்துக்கும் எடுத்து போகும்போது ஒரு புத்துணர்வு பிறக்கிறது.

'தூங்காமல் தூங்குவது எப்படி?', 'காலமற்ற இன்றைய பொழுது', 'எல்லையற்றதை ஒரு மணிப்பொழுதினுள் காண்' என்றெல்லாம் பாதையிலே எழுதப்பட்டிருக்கும் பல கைகளைகண்டு திகைக்கிறோம். இறுதியில் இந்தப் பயணம் முடிவுறும்போது, நாம் நம் இதயத்தை அரவணைத்து, அதனோடு இணைந்து முழுகும் புத்துணர்வோடு பிரியாவிடை பெறுகிறோம். இது ஓர் உன்னதமான காவியம். ■

II ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஏறேறு சங்கிலி

பிறகு தான் அடி பழுதாப் போகும் ஆனபடியா நுனி பழுதாப்போன மரங்களில ஏறிறேல்லை.

அதோட ஒருநாளும் விக்கிற சாமானை வாயில வைச்சுப் பாக்காத. மரம் ஒருக்காலும் கலப்படம் செய்யாது. அது தன்டை சாறைத் தான் தாறது. சாறு கெட்டதில்லை, இனிப்பும் புளிப்பும் தண்ணிக்கு, மண்ணுக்கு, மழைக்கு எண்டு மாறும்" எண்டு கள்ளுபதேசம் செய்யக் கேட்டுக் கொண்டிருந்தான். ஒலை வெட்டக்கேட்டா கவனம் ஒண்டைவிட்டொரு வருசம் தான் வெட்டிறது, காண்டாவனம் நடக்கேக்க வெட்டிறேல்லை. அப்பிடி ரெண்டு வருசம் வெட்டாத மரம் எண்டால் கவனம் காவோலை வெட்டேக்க குளவி இருக்கும் எண்டு அனுபவத்தை அப்பா சொல்லக் கவனமாக் கேட்டான் சின்னவன். மூண்டு மாசம் அப்பரோட போனவன், தனக்கெண்டு மூண்டு மரம் தேடிப்பிடிச்சு தனிச்சுத் தொழில் தொடங்கினான்.

காலமைத் தொழிலுக்கு நாலு நாலரைக்குப் போறாக்களும் இருக்கினம். இரவல் காணீல பேசிக் காசு குடுத்து ஏறிப் பாளை வெட்டி நுனி கொத்தி , முட்டி கட்டி இறக்கி , எல்லா மரத்தையும் ஒரு can இல ஊத்திக் முழுசா நிரப்பிக் கொண்டு போக வழி மறிச்சுக் கேட்டவனுக்கும் முட்டீல இருக்



கிறதை குடுத்திட்டு மிச்சத்தை தவறணைக்கு கொண்டு போக, அவன் சும்மா விலையைக் குறைக்க " என்ன நேற்றைக்கு கொஞ்சம் புளிச்சிட்டு" எண்டிற புளிச்சல் கதையையும் கேட்டிட்டு , திருப்பி வந்து மனிசி விடிய கட்டித் தந்ததை விழுங்கீட்டு திருப்பி அடுத்த வளவுக்க ஏறி இறக்க பத்து மணி ஆகீடும். வெய்யில் ஏறக் கள்ளுப் புளிச்சிடும் எண்டதால மத்தியானக் கள்ளை ஆரும் கிட்ட இருக்கிற ஆக்களுக்கு வீடு வளிய போய்க்குடுத்தா கொஞ்சம் கூடக்கூறையத் தாறதோட வெறுந்தேத்தண்ணியும் கிடைக்கும். போய்ச் சாப்பிட்டிட்டுப் படுத்தாஅடுத்த இறக்கம் பின்னேரம் நாலு மணிக்குத்தான்.

"என்ன மாமா வெளீல இருந்து வந்திருக்கிறார் போல, எங்களுக்கு ஏதும் போத்திலைக் கீத்திலைக் கொண்டந்தவரே" எண்டு கேட்ட படி வாறவருக்கு ஓம் ஒரு party ஐப் போடுவம் ஆனால், " அவருக்கு நல்ல கூழ்வேணுமாம் அதோடரெண்டு கிடாய்ப் பங்கும் வேணுமாம், பங்கு போட்டிட்டு ரத்தவறை வறுத்து முடிய உடன் கள்ளும் வேணுமாம்" எண்ட சம்பாசணை எல்லா வீட்டையும் கேட்டிருக்கும்.

இக்கரைக்கு அக்கரைப் பச்சையாய் எங்கடை சனத்துக்கு அவை கொண்டாற போத்தில தான் நாட்டம் இருக்கும் ,ஆனா அவை குடிச்சா ஒரு பனைக்கள்ளுத் தான் குடிப்பன் எண்டு தேடிக் குடிப்பினம். அவையோட ஊருக்குப் புதுசா வாறதுகள் இறக்கிறவனை ஏறவிட்டு நிமிந்து பாத்துப் வீடியோ எடுத்து ஊரெல்லாம் "எங்கள்" புகழைப் பரப்ப வெளிக்கிடுவினம். வந்தவை இறக்கினதை குனிஞ்ச படி குடிச்சிட்டு "எண்டாலும் பழைய taste இல்லை" எண்டு ஒரு கதை விட்டு ஆனாலும் அடி மண்டி வரை குடிப்பினம். இறக்கினதை மட்டும் பாக்கிறவைக்கு ஒருநாளும் இறக்கிறவனைத் தெரியாது. நெஞ்சு மடிப்போட சேத்தா 8 packs பனங்கட்டி நிறத் தேகம், பிறப்புக்கு முதலே எழுதப்பட்ட விதியால் பிரியோசனமில்லாமல் போய் ஏறிஏறியே அழிக்கப்பட்ட கைரேகை, காலமை குளிச்சாப்பிறகு உடம்பைத் துடைச்சிட்டுத் தலையில கட்டின துவாயத்துண்டு, எப்பவுமே மடிச்சுக்கட்டின சாரம், இடுப்பில கட்டின சாரத்தை இறுக்கிக் கொண்டிருந்த இடுப்புப் பட்டியில இயனக்கூடு, சைடில தொங்கிற தளைநார், அதோட சேந்த முட்டி, சாரத்துக்க செருகின பாளைக்கத்தி, tyre less ரியூப் மாதிரி இருக்கிற வழுவழுப்பான tyreஓட முன்னுக்கும் பின்னுக்கும் பழைய can தொங்கவிட்ட கறள் கட்டின சைக்கிளில வாறவனின்டை கள்ளு மட்டும் எங்களுக்கு இனிக்கும், ஆனாலும் இன்னும் இறக்கிறவனை மட்டும் ஏனோ இனிக்கேல்லை இன்றைக்கும். ■








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# ஒரே ஒரு பள்ளி மாணவிக்காக ஜப்பானிய அரசு செய்த சேவை!



ஒரே ஒரு பள்ளி மாணவிக்காக மூடப்பட இருந்த ரயில் நிலையத்தை அந்த மாணவியின் படிப்பு முடியும் வரை திறந்து வைத்த நெகிழ்ச்சியான உண்மை சம்பவம் தான் இது..!!

ஜப்பானின் (Kyu-shirataki Station) கியூ ஷீராட்டகி என்கிற ஊரில் தினமும் ஒரே ஒரு ரயில் மட்டும் வந்து செல்லும் ரயில் நிலையம் ஒன்று செயல்பட்டு வந்தது. அந்த ரயில் நிலையத்துக்கு போதிய பயணிகள் வராததால் ஜப்பானிய ரெயில்வே அந்த ரயில் நிலையத்தை 2015 ம் ஆண்டு உடனடியாக மூடி விட முடிவு செய்தது. ரயில் நிலையத்தை மூடும் முன்பு அதிகாரிகள் ஆய்வு செய்ததில் கன ஹரதா என்கிற ஒரே ஒரு பள்ளி மாணவி மட்டும் தினமும் கியூ ஷிராட்டகி ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு 35 நிமிடங்கள் பயணம் செய்து மற்றுமோர் ரயில் நிலையத்தை அடைந்து அதன் பின் பள்ளிக்கு செல்வதாக ரயில்வே அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

உடனடியாக ரயில் நிலையத்தை மூடினால் மாணவியின் உயர்பள்ளி படிப்பு பாதிக்கும் என்பதால் அந்த மாணவியின் படிப்பு முடியும் வரை கிட்டதட்ட 15 மாதங்கள் அந்த ரயில் நிலையத்தை திறந்து வைத்து படிப்பு முடிந்த பின் மூடியது ஜப்பானிய ரயில்வே..!!

# மாற்றத்தின் முன்னோடிகள் நாங்களாக அல்லவா இருந்திருக்க வேண்டும்?

யாழ்ப்பாணத்தில் ஈரோஸிற்கு 8 ஆசனங்களும், EPRLF இற்கு 3 ஆசனங்களும் கிடைத்தன. ஈரோஸின் ஸ்தாபகர்களில் ஒருவரான இரத்தினசபாபதியிற்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைத்தது. அவரோடு, பின்னாளில்

தமிழீழ நீதித்துறை பொறுப்பாளராயிருந்த, பரா, மாமனிதர் சிவமகாராசா ஆகியோரும் தெரிவாகினர். EPRLF சார்பில் போட்டியிட்ட மூவரும் தெரிவாகினர். சுரேஷ் பிரேமச்சந்திரனை விட நவரத்தினத்திற்கு கிடைத்த வாக்குகள் அதிகம். தமிழர் விடுதலை கூட்டணி பிரமுகர்கள் அனைவரும் தோல்வியை தழுவினார்கள்.

மட்டக்களப்பிலும் அதே கதை, அமிர் தோல்வி, டெலோ கருணாகரனுக்கு அதிகப்படியான வாக்குகள். அவரோடு பிரின்ஸ் காசிநாதரும் சாம் தம்பிமுத்துவும் தெரிவானார்கள். அமிர்தலிங்கம் தேசிய பட்டியலூடாக பாராளுமன்றம் புகுந்தார். ஈரோஸிற்கு திருகோணமலையில் 2, வன்னியில் 1, தேசிய பட்டியலில் 1 என்று ஆக மொத்தம் 12 ஆசனங்கள் கிடைத்தன.

தேசிய பட்டியலில் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பையும் தட்டிக் கழித்துவிட்டு, ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் வே. பாலகுமார், யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மாறி மாறி நிலைகொண்டு தனது இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களை வழிநடத்தும் தலைமைத்துவ வகிபாகத்தை செவ்வனே நடத்திக் கொண்டிருந்தார். ஈரோஸ் இயக்கத்திற்கு கிடைத்த தேசிய பட்டியல் ஆசனம் ஈரோஸ் இயக்கத்தின் ஏறாவூர் பொறுப்பாளரான பசீர் சேகுதாவூதிற்கு வழங்கப்பட்டது.

தேர்தலின் பின்னர், மே 4, 1989 ஆம் ஆண்டு பிரேமதாசா அரசிற்கும் இயக்கத்திற்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் கொழும்பு ஹில்ட்டன் ஹோட்டலில் ஆரம்பமாகி,



ஜூன் 10, 1990ல் முடிவிற்கு வந்தது. யுத்தம் ஆரம்பமாகி 15 ஆவது நாள், 12 ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்யுமாறு இயக்கத்தால் பணிக்கப்பட்டனர். சில வாரங்களிற்கு பின்னர் ஈரோஸ் இயக்கம் பிளவுற்று, வே. பாலகுமார் தலைமையிலான ஈரோஸ் அணி இயக்கத்துடன் இணைந்து கொண்டது.

பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்று ஈரோஸ் இயக்கத்தின் இரத்தினசபாபதி, "எம்மைப் பொறுத்தவரையில் இந்த நாடாளுமன்றத்தை தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிமுறையுள்ள சபையாக நாம் கருதவில்லை. சாதாரண பெரும்பான்மை மூலம் தீர்மானம் இயற்றும் வழிமுறையுடைய இச்சபையில் தமிழ்த்தேசிய இனமானது தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தீர்மானம் எதையும் நிறைவேற்றும் ஆற்றல் உடையதாக இங்கு இருக்க முடியாது." என்று ஆற்றிய கன்னி உரை எந்தக் காலகட்டத்திற்கும் பொருத்தமானதே.

1989 இல் பாராளுமன்றத்திற்கு தெரிவான ஈரோஸ் இயக்கத்தினரை அன்று இராஜினாமா செய்ய வைக்காமல் இருந்திருந்தால், அவர்கள் தமிழ் தேசியத்தின் குரலாக அரிய பணியாற்றியிருப்பார்கள். அதைவிட முக்கியமாக, 1994 இல் பத்து பதினைந்து வாக்குகளுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து பத்து ஈபிடிபியினரை பாராளுமன்றம் வரவும் விட்டிருக்க மாட்டார்கள். அதையும் விட முக்கியமாக, 2000 இல் பாவமன்னிப்பு அளிக்கப்பட்ட கூட்டணி. ஈபி, டெலோவை உள்வாங்கி உருவாக்கப்பட்ட TNA இற்கும் தேவை எழுந்திராது.

2009 இற்கு பின்னர் தமிழ் தேசிய கட்சிகளில் இருந்து தெரிவான பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள், தமிழ் தேசியம் பேசும் அனைவரின் மேலும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதும், இன்று சிங்கள தேசிய சோஷலிஸ ஜேவிபியின் அலை அடிப்பதற்கு பிரதான காரணம். ஆனால், இன்றும், தமிழர் தாயகப் பகுதிகளில், உண்மையான தமிழ் தேசிய பற்று நீறு பூத்த நெருப்பாக பல இளையோரில் உறைந்திருப்பது, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை தருகிறது.

நிறைவாக, இலங்கை தேசத்தில் ஜேவிபி கொண்டுவர முனையும் மாற்றம் வரவேற்கத்தக்கது. அந்த மாற்றத்தில் நாங்களும் பங்காளிகளாக வேண்டியதும் காலத்தின் கட்டாயம். எங்களது பங்களிப்பு, நாங்கள் ஒரு இனக் குழுமமாக தேசிய அரசில் இணைவதாக அமைய வேண்டுமேயன்றி, எங்கள் பகுதிகளின் பாராளுமன்றக் கதிரைகளை ஜேவிபி இற்கு தாரை வார்ப்பதாக அமைந்து, எங்களது அடையாளத்தையும் தனித்துவத்தையும் இழப்பதாக அமைந்து விடக்கூடாது.

தமிழர் பகுதிகளில் தொண்ணூறுகளில் வீசிய சந்திரிக்கா தென்றல் போல, அநுர அலையும் அடித்து ஓயட்டும். இதுவும் கடந்து போகட்டும்.. போகும்.



19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அழகுக்கும் கவர்ச்சிக்கும் பின்னால்

அந்த மனிதனின் முகத்தை மற்றும் உடலை செங்குத்து வாக்கில் சரிபாதியாகப் பிரித்துப் பார்க்கும் போது, இருபுறமும் ஒரே மாதிரியாக இருந்தால் அந்த மனிதன் கவர்ச்சியானவராகத் தெரிவார். இதை ஆங்கிலத்தில் Bi lateral symmetry என்று அழைப்பார்கள்.

இதைத் தவிர்த்து வயிற்றிற்கும், இடுப்பிற்குமான விகிதம் அதாவது சயவழை குறைவாக இருந்தாலும் அந்த மனிதன் நமக்குக் கவர்ச்சியாகத் தெரிவார். நமது உடலில் கொழுப்பு எந்தப் பகுதிகளில் சேர்க்கப்படுகின்றது என்பதை ஆண்களுக்கு ஆண்மையியக்குநீர் ஆகிய Testo sterone மற்றும் பெண்களுக்குப் பெண் பாலின இயக்குநீர் ஆகிய Es trogene நியமிக்கின்றது. உதாரணத்திற்குச் சரியான அளவில் estrogene சுரக்கும் பெண்களின் வயிற்றடியின் அளவு, இடுப்பின் அளவின் 70 வீதமாக இருக்கும். அதே போல் தான் ஆண்களுக்கும் பொருந்தும். இதில் உள்ள சுவாரசியமான விஷயம் என்னவென்றால், இந்த விகிதத்தில் இருக்கும் வயிறு மற்றும் இடுப்பின் அளவு உள்ளவர்களுக்கு இதயத்தோடு சம்பந்தப்பட்ட நோய்கள், புற்றுநோய் மற்றும் நீரிழிவு நோய்க்கான வாய்ப்புகள் குறைவாக இருக்குமாம்.

சரி, ஒருவரைப் பார்க்கும் போது இதெல்லாமே சரியாக இருக்கிறது என்று எடுத்துக்கொள்வோம். அப்படி இருந்தும் அவரைப் பார்க்கும் போது உங்களுக்குக் கவர்ச்சியாகவோ அழகாகவோ தெரியவில்லை என்றால் என்ன காரணமாக இருக்கலாம்? இதற்கு pheromones எனும் வேதியியல் பொருளே காரணமாகும். இந்த phero mones நம்முள் சுரக்கும் மணமுடைய வேதிப்பொருள் ஆகும். தெளிவாகக் கூறவேண்டுமென்றால் நமது வாசம் என்றும் கூட கூறலாம். ஒவ்வொருவரின் மரபணுக்களைப் பொருத்து, இந்த pheromones இன் வாசம் அமையும். இதில் உள்ள சுவாரசியமான விஷயம் என்னவென்றால், கிட்டத்தட்ட நமது மரபணுக்கள் போலவே இருக்கும் ஆண் அல்லது பெண்ணைத் தான் நாம் கவர்ச்சி என்று எண்ணுகிறோம். ஆனால் இதிலும் ஒரே ஒரு வேறுபாட்டைக் கவனிக்கவேண்டும். அது என்னவென்றால் அந்த நபரின் நோய் எதிர்ப்புச் சக்தியும் நமது நோய் எதிர்ப்புச் சக்தியும் வேறுபட்டவையாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் அடுத்த தலைமுறை பல விதமான நோய்களை எதிர்த்து பல்லாண்டு காலம் வாழலாம்.

ஒருவர் அழகாக அல்லது கவர்ச்சியாக இருப்பதற்குப் பின்னால் இவ்வளவு அறிவியல் இருக்கிறது என்று நினைக்க ஆச்சரியமாக இருக்கிறதா? அட, நமக்குப் பொருத்தமான ஒருவரைக் கண்டுபிடிப்பதே பெரும் அதிசயம், அதற்குள் மனிதர்களாகிய நாம், இனம், மதம், ஜாதி, மொழி என்று பிரிவுகளை உண்டாக்குவது மட்டுமில்லாமல், திருமணம் செய்வதற்கு முன்பு தினப் பொருத்தம், கணப்பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், தாலிப் பொருத்தம், ராசிப் பொருத்தம், வசியப் பொருத்தம் போன்ற பல்வேறு பொருத்தங்களைப் பார்த்த, தோசங்கள், ஏழில் அல்லது எட்டில் உள்ள செவ்வாய், ராகு கேதுவின் நிலைப்பாடு போன்ற அறிவியலுக்கு மீறிய விஷயங்களுடன் எங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்திக் கஷ்டப்படுகின்றோம். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வாழ்கின்ற போதே தனியாகவும்....

பிள்ளைகளுக்கு 18 வயது வந்துவிட்டால், தம்முடைய பிள்ளைகளை வேறு வீடு எடுத்துத் தனியே வாழ பெற்றோர்கள் அனுப்பிவிடுகின்றனர். இதனைப் பாசமற்ற பெற்றோர் என்று தமிழர்கள் விமர்சித்தாலும் எந்தக் கடினமான சூழ்நிலையிலும் தம்மைத் தயார்படுத்த அவர்கள் கற்றுக் கொள்ளுகின்றார்கள் என்பதுவே யதார்த்தம். தம்முடைய பிள்ளைகளுக்கு அந்தத் தைரியத்தைப் பெற்றோர் தாராளமாகக் கொடுக்கின்றனர்.

அதுபோலவே கணவன் மனைவி இருவரும் தமக்கான தேவைகளைத் தாமே ஆற்றுகின்ற நடைமுறைகள் ஐரோப்பிய நாடுகளில் பெரிய சாதனையாகக் கொள்ளப்படுவதில்லை. சூரியனைச் சுற்றி பூமி நகர்வதுபோலத் தம்மைச் சுற்றிக் கணவன் வரவேண்டும் என்பதற்காகத் தமிழ்ப் பெண்கள் தம்முடைய சமையலறையை கணவனுக்கு விட்டுக் கொடுப்பதில்லை. “என்ன இருந்தாலும் சாப்பாட்டுக்கு என்னிடம் தானே வரவேண்டும். எதுவானாலும் இந்த உரிமையை மட்டும் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்“ என்று கூறுகின்ற எத்தனையோ பெண்களின் வார்த்தைகளைக் கேட்கின்றோம். ஆனால் ஆண்கள் நினைக்கின்றார்கள் என் மனைவி என்னைத் தங்கத் தட்டில் வைத்துத் தாங்குகின்றாள். அவள் இல்லாவிட்டால் என்னால் வாழ முடியாது என்று பெருமையாகப் பேசுகின்றார்கள். ஆனால், இது எந்த அளவிற்கு அவருடைய வாழ்க்கையைப் பாதிக்கின்றது என்பதை அவர் உணர்வதில்லை.

வாழுகின்ற போதே தம்மைத் தனியாக வாழத் தயார்ப்படுத்தவில்லை என்றால், மனைவி தன்னைவிட்டுப் பிரிகின்ற சந்தர்ப்பம் ஏற்படுகின்ற தருணத்தில் அவரால் தனித்து வாழ முடியாது மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது. நோய் இலகுவாகத் தொற்றிக் கொள்ளுகின்றது. ஆண்கள் முடியமானவரைத் தம்முடைய வேலையைத் தாமே செய்தால் அவர்களுடைய உடல்நலத்துக்கும் சிறப்பு. அதைவிட அவருக்கு யாருமில்லாமல் என்னால் வாழ முடியும் என்னும் தைரியமும் ஏற்படும்.

“வாயிருந்தால் வங்காளம் போகலாம்“ என்பார்கள், நாம் அபூர்வ மூளை என்னும் இயந்திரத்துடன் பிறந்திருக்கின்றோம். அதற்கு வலுவாக கட்டளை போட்டுவிட்டோமேயானால், எம்மை எந்த எல்லைக்கும் அது கொண்டு செல்லும். அதனால், எம்மால் முடியும் என்ற வலுவான நம்பிக்கையுடன் தனித்து வாழ ஆணும் பெண்ணும் முயற்சி எடுக்கலாமே. இளஞ்சந்ததியினர் இதற்குத் தயாராகிவிட்டார்கள். அதனால், இக்கட்டுரை அவர்களுக்கானதல்ல. முதியவர்களுக்கானது. இன்றே செய் அதை நன்றே செய் . ■

24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## எமக்கு மட்டும்

மன உறுதியை இழந்து விடாமல், அதை முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் ஒரு அனுபவமாகக் கருத வேண்டும். வாழ்க்கையில் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் புனிதமாக எண்ணி, அதற்காக அயராது உழைத்தால், அது ஒருநாள் நமக்கு வெற்றியை அளிக்கும். தோல்வி என்பது முடிவல்ல அது வெற்றியின் தொடக்கம் என்பதை உணர்ந்தவர்களால் வாழ்க்கையில் எத்தகைய சோதனைகளையும் எதிர் கொள்ள முடியும். ஆம்! விழுவதெல்லாம் எழுவதற்கேயொழிய் அழுதுகொண்டே அழிவதற்கல்ல. ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சாகோஸ் தீவுகள் - இங்கிலாந்தின் கடைசி ஆபிரிக்க காலனி:

தளத்தை கொண்டிருக்கும். மேலும் இது இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் தொடரந்து வைத்திருக்கும்.

**40 ஆண்டு கால நீண்ட போராட்டம்:**

1968 இல் இங்கிலாந்தால் சாகோஸ் தீவுகள், மொாிஷியஸின் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டு 3000 பேர் வரை வலுக்கட்டாயமாக இடம்பெயர வைக்கப்பட்டனர். 40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த இந்த ஒரு நீண்ட போராட்டத்தில், அங்கு வாழ்ந்த மக்களில் பலர் இறந்துவிட்டனர். ஆயினும் 2000 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து நீதிமன்றங்களில் இத்தீவுகளின் இறையாண்மையின் மீது தொடர்ச்சியான சட்ட சவால்களை எதிர் கொண்டது. தற்போதய மீள ஒப்படைப்பின் பின்னர், எத்தனை சாகோசியர்கள் தீவுகளுக்குத் திரும்ப விரும்புகிறார்கள் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை, அங்குள்ள குடியிருப்புகள் பல வசிக்கத் தகுதியற்றவை. அங்கு வரும் சாகோசியர்களின் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என கோரியுள்ளனர்.

**சக்தியற்றவர்களின் குரல் :**

நமது தாயகத்தின் இறையாண்மை தொடர்பான இந்த நோக்கத்தை உருவாக்கிய பேச்சுவார்த்தைகளில் இருந்து சாகோசியன் சமூகத்தை விலக்கியதை சாகோசியன் குரல்கள் வருத்தம் தெரிவிக்கின்றன. சாகோசியர்கள் இந்த முடிவை ஊடகங்களிலிருந்து கற்றுக்கொண்டனர். நமது சொந்த எதிர்காலத்தையும் நமது தாயகத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதில் சக்தியற்றவர்களாகவும் குரலற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என ‘சாகோசியன் குரல்கள்’ எனும் பிரிட்டன் மற்றும் பல நாடுகளில் உள்ள சமூக அமைப்பானது நேற்றய வியாழன் அறிவிப்பு பற்றி கூறியுள்ளது. அத்துடன் இந்த ஒப்பந்தத்தில் சாகோசியர்கள் கலந்தாலோசிக்கப் படவில்லை அல்லது ஈடுபடவில்லை என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் அமைந்தன எனவும் கூறப்பட்டுள்ளது. இதேவேளை தீவுகளின் பழங்குடியினரான சாகோசியர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றன. மேலும் ஒப்பந்தத்தின் வரைவில் தாயக உரிமை முழுமையாக சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.


அதேவேளையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், இந்த ஒப்பந்தத்தை நாடுகள் இடையே அமைதியான மற்றும் பரஸ்பரம் அடைய முடியும் என்பதற்கான தெளிவான பார்வை என்று கூறியுள்ளார். அமைப்பு கோரியுள்ளது. ■







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# பொன்.புத்திசிகாமணியின் ‘நான் பார்த்த நந்திக் கடல்’ ஒரு பார்வை

1970-80களில் ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை வாசகர்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்ட அல்லது வாசிக்கப்பட்ட ஒரு பெயர் பொன்.புத்திசிகாமணி.தனக்கு வாய்த்த ஊடக வெளிச்சத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வன்னிக்கு மறுக்கப்பட்ட வாழ்வியல் அடிப்படைத் தேவைகளை,,அன்றாடப் பிரச்சனைகளை,அங்கு வாழ்ந்த மக்களின் தேவைப் பற்றாக்குறைகளை உரிய இடங்களின் கவனத்திற்குக் கொண்டுசென்றதில் அவரின் பணி காத்திரமானது.

செய்திகளாக மட்டுமன்றி,கட்டுரைகளாக, சிறுகதை வடிவங்களாக ஒரு சமூக மறு மலர்ச்சியை நோக்கிய அவரின் பயணம் இன்னும் தொடர்கிறது.இதற்கான மற்றொரு சாட்சிதான் இப்போது வெளியீட்டுக்குத் தயாராகவிருக்கும் “நான் பார்த்த நந்திக்கடல்”என்ற ஒரு ஆவணப் பதிவு. இதற்கு முன்பு,சொர்ணம்மா,சின்னாச்சி மாமி என்று இரண்டு சிறுகதைத் தொகுப்புகளை நூலுருவாக்கி வெளியிட்டுள்ள அவரின் மூன்றாவது வெளியீடாக வருகிறது “நான் பார்த்த நந்திக்கடல்”

2023ல் சின்னாச்சி மாமியை வெளியிட்ட பொன்.புத்திசிகாமணி, 2024ல் நான் பார்த்த நந்திக் கடல் நூலை வெளியிடுகிறார் என்பதை ஒரு அசாதாரண நிகழ்வாகவே என்னால் பார்க்க முடிகிறது.நந்திக் கடலினைப் பிரதிபலிக்கும் அழகிய படத்தினை அட்டைப்படமாகக் கொண்டு “ஜீவந்தி”வெளியீடாக இந்நூல் வெளிவந்திருக்கிறது.குருவிச்சி ஆறு,பேராறு ஆகிய வன்னியின் இரு முக்கிய ஆறுகளின் நீரேந்து பகுதியாகப் பரந்து விரிந்து கிடக்கும் நந்திக்கடலின் முடிவு வட்டுவாகல்வரை நீள்கிறது. முல்லைத்தீவின் ஒரு எல்லைக் கிராமமாக அமைந்துள்ள இந்த வட்டுவாகலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்.புத்திசிகாமணி, தான் பார்த்த நந்திக் கடலை அவரது யதார்த்தமான எழுத்து நடையில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். அவரின் சின்னாச்சி மாமி சிறுகதைத் தொகுதியில் வரும் அனேகமான சிறுகதைகளில் உண்மைச்சம்பவங்களையும், தேவையைப் பொறுத்து உண்மையான கதைமாந்தர்களையும் உலாவவிட்டே வாசகர்களை வசப்படுத்தியிருப்பார்.

ஆனால் ‘நான் பார்த்த நந்திக்கடல்’ என்ற இந்த வரலாற்றுப் பதிவை வேறுபட்டதொரு களத்திலும்,தளத்திலும் அவர் நகர்த்திச் செல்கிறார்.இந்த நூல் நந்திக்கடலை மாத்திரமல்ல, அதை அண்டியுள்ள கிராமங்களையும்,அங்கு

வாழ்ந்த மக்கள்,அவர்களின் வாழ்வியல்,முல்லைத்தீவின் முக்கியமான கடைத் தொகுதிகள்,பிரமுகர்கள் பற்றியெல்லாம் குறிப்பிட்டுச் செல்வது இப் பிரதேசத்தோடு தொடர்புடைய வாசகர்களை நிச்சயம்



கவரும்.. ஆனால் 70,80 களில் முல்லைத்தீவின் அடையாளங்களில் ஒன்றாயிருந்த “லதா ஸ்ரூடியோ”அதன் உரிமையாளர் சண்முகம் அண்ணர் பற்றியும் குறிப்பிட்டிருப்பின்,அது நூலாசிரியரின் நோக்கத்திற்கு இன்னும் வலுச்சேர்பதாயிருந்திருக்கும்.

காரணம்,அந்தக் காலத்துக் கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்குப் பின்னாலே நிச்சயம் ஒரு கதை இருக்கும். என்னுடைய அடையாள அட்டைப் படத்திற்குப் பின்னாலும் ஒரு பசுமையான நினைவு இன்னும் இருக்கிறது.அப்போது வித்தியானந்தக் கல்லூரி விடுதிச்சாலையில் இருந்ததால் வெளியே போகும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு.அடையாள அட்டைக்கு படம் எடுக்கும் சந்தர்பத்தைப் பயன்படுத்தி அதிபர் திரு.வி. பொன்னம்பலத்தின் அனுமதிபெற்று நானும் சில நண்பர்களும் முல்லைத்தீவிற்குப் போயிருந்தோம். பி.ப. 6.00 மணிக்கு பட்டின சபை ‘லைற் இஞ்சின்’ இயக்கிய பின்பு தான் படம் எடுக்க முடியும்.அந்த இடை-வெளியில் கடற்கரைக்குப்போய் சுற்றிவிட்டு வந்து படம் எடுத்தபின் ஜெஸ்சி சினிமாவில் படம் பார்த்துவிட்டு இரவு பத்து மணிக்கு பட பஸ்சில் ஏறி விடுதிக்குப் போய், குணசிங்கம் சேருக்கு முன்னால் கைகட்டி நின்றதெல்லாம் நினைவில் பதிந்த அழகான காலங்கள்

நீண்ட பயணங்களின்போது சில புத்தகங்களைக் கூட எடுத்துச் செல்வது எனது வழக்கம். கடந்த செப்டம்பரிலும் டோஹாவிலிருந்து பிலடெல்பியாவுக்கான 13 மணித்தியால விமானப் பயணத்திலும் பொன்.புத்திசிகாமணியின் “நான் பார்த்த நந்திக்கடல்”புத்தகத்தையும் கையோடு எடுத்து வந்திருந்தேன்.புத்தகம் வாசித்த லயிப்பில் பயண முடிவை அடைந்தபோது பயண தூரமும்,நேரமும் பாதியாகக் குறைந்துவிட்டதுபோல மனது உற்சாகமாயிருந்தது..அவரின் யதார்த்தமான எழுத்தநடை அவர் பக்கத்திலிருந்து கதை சொல்லிக்கொண்டு வருவதுபோன்ற உணர்வையே தந்தது.உரியவர்கள் இல்லாமல் இன்னும் அவர்களின் பெயரையே தாங்கிக்கொண்டு ஆங்காங்கே விரவிக் கிடக்கும் தென்னந் தோட்டங்கள், பல ஏக்கர் கணக்கான வயல்,மற்றும் வெற்றுக் காணிகள் போன்றவற்றை அவர் நிரல் படுத்தியிருக்கும் முறை,வாழும்,மற்றும் வரும் தலைமுறைகளுக்கான ஆவணப் பதிவாகக்கூட அமையலாம்.இதற்கு முன்பும் சிலர் நந்திக்கடல்பற்றி தங்கள் ஆய்வுக்கு,அல்லது தேடலுக்குப் பொருத்தமானவற்றைப் பதிவுசெய்து மக்கள்முன் வைத்திருக்கிறார்கள்.


குரு சதாசிவம்

சில ஆண்டுகளுக்கு முன் வெளியான ஆய்வாளர் அருணா-செல்லத்துரையின் “நன்னீர் நந்திக்கடல்”என்ற நூல் அவரின் ஆய்வுக் கண்ணோட்டத்திலேயே உருவாக்கம் பெற்றிருந்தது.நந்திக்கடலின் அமைவு,கடல்,கரையோரப் பாதுகாப்புத் தொடர்பான அதன் முக்கியத்துவம்பற்றி அவர் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டியவையே.ஒரு காலத்தில் பாதுகாப்பைக் காரணம்காட்டி அரசாங்கத்தினால் முல்லைத்தீவுநகரப் பகுதி கபளீகரம் செய்யப்படும் ஆபத்து இருப்பதாக அவர் எச்சரித்திருப்பதை அலட்சியப்படுத்தமுடியாது.

ஆனால் இங்கு புத்திசிகாமணியின் நந்திக்கடல்பற்றிய பார்வைவேறானது. தனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து 1985 வரை, குறிப்பாகச் சொன்னால் அவரின் 35 வயதுப் பராயம் வரை அதன் மடியிலே தவழ்ந்து,ஓரங்களிலே நடை பயின்ற, கரைகளில் நீச்சல் பழகி,இப்படி உணர்வுகளோடு கலந்த ஒரு இடத்தை அதன் சூழல்களைத் தன்னுடைய பார்வையில்,தன்னுடைய பாணியில் அவர் எழுதியவிதம் அழகு.

”உடுப்பைக் களைந்து கரையிலே போட்டுவிட்டு, யரோ கழட்டி எறிந்திருந்த கோவணத்தை எடுத்துக் கட்டிக்கொண்டு கடலிலே இறங்கிவிடுவோம்”என்ன துணிச்சல்?இப்படிப் பல இடங்களிலே மற்றவன் என்ன நினைப்பான் என்ற எண்ணத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு அன்றைய யதார்த்தமான வாழ்வியலை அப்படியே பதியம்போட்டு வைத்திருக்கிறார்.இந்த நூலை “ஒரு காலத்தின் கண்ணாடி”என்று நான் பதிவுசெய்கிறேன். இப்படியான படைப்புகளை அவர் தொடர்ந்து எழுதுவது காலத்தின் தேவை. ■






## திருமணத்துக்குப் பின் கணவனோ, மனைவியோ

# அவரவர் குணவியல்பிலிருந்து விலகிப் பரஸ்பரம் மற்றவரின் பண்பைப் பழகும் வாழ்வியல் அது

**கானா பிரபா** (அவுஸ்திரேலியா)

ஸ்ரீதிவ்யா எனக்கு ரொம்பப் பிடிக்கும், அதனால மெய்யழகன் படைப்பில் அவங்களையும் சேர்க்கணும்னு ஹைதராபாத் வரை தேடிப் போய் பிடிச்சு வந்தேன். அவங்க முதல்ல நடிக்க இருந்தது கார்த்தியோட தங்கையாக“ இப்படியாக சாய் வித் சித்ராவில் இயக்குநர் சி.பிரேம்குமார் தன் பேட்டியில் சொல்லி இருந்தார்.

உண்மையில் மெய்யழகன் படத்தில் அர்விந்த்சாமிக்கு அடுத்ததாகப் பாத்திர வார்ப்பில் என்னை மிகவும் கவர்ந்தவர் ஸ்ரீதிவ்யா தான்.கார்த்தியும், அர்விந்தசாமியும் ராத்திரியில் குடித்துக் கும்மாளமிடப்போகிறார்கள் என்று தெரிந்தும், நயமாக அவர்களுக்கு வழி விடுவதும்

அவர்களின் கொட்டத்தைக் காது கொடுத்துக் கேட்டு முறுவலிப்பதும்,“சாப்பிடுறீங்களாண்ணா“ அன்றே அறிமுகமான அந்நிய உறவுக்காறர் அர்விந்த்சாமியைப் பரிவோடு கேட்பதும்,இதையெலாம் தாண்டி அந்த ஜல்லிக்கட்டுக் காட்டியில் மிடுக்கோடு சினிமாத்தனமில்லாத ஒரு வீராங்கனையாக வருவதும் என்று ஸ்ரீதிவ்யாவுக்கு ஒரு அழுத்தமான வாழ்நாட் பாத்திரத்தை பிரேம்குமார் கொடுத்திருக்கிறார்.

அதையெல்லாம் தாண்டி ஒரு அனுபவரீதியான ஒரு காட்சியும் இருக்கும். அர்விந்த்சாமிக்கு உதவ வேண்டும் என்று கார்த்தி எல்லாத்தையும் அள்ளிப் போடும் போது ஒத்தாசையாக ஸ்ரீதிவ்யா நாண்டு கொண்டு நிற்பதை அக்மார்க் வெள்ளந்திக் கிராமியப் பெண்களிடம் பார்க்கலாம். அதாவது தன் கணவன் அப்பாவியாக எல்லாத்தையும் வழிச்சுத் துடைச்சு உதவும் போது கூடவே அவனின் குணாம்சம் ஒட்டிக் கொண்ட பெண்களை அனுபவத்தைக் கண்டிருக்கிறேன்.

“இந்தாங்க ! இதையும் அவங்களுக்குக் கொடுத்துடுங்க பாவம்“ என்ற மனோநிலை. இதை என் வீட்டம்மாவிடம் ஏதோவொரு சந்தர்ப்பங்களில் அடிக்கடி கண்டிருக்கிறேன். திருமணத்துக்குப் பின் கணவனோ, மனைவியோ அவரவர் குணவியல்பிலிருந்து விலகிப் பரஸ்பரம் மற்றவரின் பண்பைப் பழகும் வாழ்வியல் அது.



# வறுமையால் பறிபோகும் மனித உயிர்கள்!.. பெற்றோல் லோறி விபத்துக்கள் அதிகரிப்பு!..

**ஆபிரிக்கா கண்ட நாடுகளில் அதிக உயிரிழப்பு!..**

பெற்றோல் போன்ற எரிபொருட்களை ஏற்றிச் செல்லும் பாரஊர்திகள் (லொறி) விபத்துக்குள்ளாகும்போது அதிலிருந்து கசிந்து வெளியேறும் பெற்றோலைச் சேகரித்து விற்றுப் பிழைப்புக்கு சீவியம் நடாத்திவரும் பாமர ஏழை மக்கள் அங்கு கூடும்

**வ.சிவராஜா** (யேர்மனி)

போது வெடிவிபத்தில் சிக்கி அநியாயமாக உயிரிழக்கும் சம்பவங்கள் நீண்ட காலம் ஆபிரிக்க நாடுகளில் இடம்பெற்று வருவதுடன் அதிக உயிரிழப்புகளும் இடம்பெற்று வரும் துன்பியல் சம்பவங்கள் ஏராளம்.

இந்த வாரம் (15.10.2024) ஒரு சம்பவம் மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் இடம் பெற்றதில் 147 பேர் துடிதுடித்து தீயில் எரிந்து பலியானார்கள்.

லொறி ஒன்று விபத்துக்குள்ளானது. அப்போது பெற்றோல் கசிவு ஒழுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தச் கசிவு எண்ணையை ஏந்தி எடுத்து விற்றுப் பணம் தேடலாம் என்று அந்தப் பிரதேச மக்கள் கூடுவது வழக்கமாகும்.

முண்டியடித்திருக்கிறார்கள். அப்



போது அந்தவிபத்துக்குள்ளான எண்ணெய் லொறி பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. வெளியேறிய பெற்றோல் தீயாகப் பரவியபோது 97 பேர் அந்த இடத்திலேயே கருகி மாண்டனர். மிகுதி 50 பேர் வைத்திய சாலைக்குக் கொண்டு சிகிச்சை அளித்தபோது உயிர் துறந்த சோக சம்பவம் உலகையே உலுக்கியுள்ளது.

மிகவும் ஏழ்மையான மக்கள் ஆபிரிக்காக் கண்டத்தில் வாழ்வதால் இப்படிப்பட்ட சம்பவங்கள் அந்த நாடுகளில் அடிக்கடி நடைபெறுகின்றன. அந்த நாடுகளில் மனித உயிர்களுக்குப் பாதுகாப்பு இன்மை ஒருபுறம் வறுமையே முக்கிய காரணம் என்றபடியால்தான் இப்படிப்பட்ட அனர்த்தங்கள் நடைபெறுகின்றன. கடந்த காலங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்ற விபரங்களைப் பார்த்தால்..

31.01.2009 -
கென்யா - 113 பேர் பலி.
02.07.2010 - காங்கோ - 230
12.07.2012 - நைஜீரியா - 121
17.09.2015 - தென்சு10டான் - 193
06.10.2016 - மலாவி - 50
17.11.2016 - மொஸாம்பிக் - 80
25.06.2017 - பாக்கிஸ்தான் -219
06.10.2018 - காங்கோ - 50
08.10.2019 - மொரோக்கோ -102
10.10.2019 - தான்சானியா - 70
05.11.2021 - சியராலியோன்- 99
14.12.2021 - ஹெய்டி - 90
15.10.2024 - நைஜீரியா -147

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



## ரஜினியின் கூலியில் அமீர்கான்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினி காந்த் நடிப்பில் உருவாகி வரும் படம் கூலி. அனிரூத் இசையமைக்கும் இப்படத்தில் நாகர்ஜுனா, ஸ்ருதிஹாசன், சத்யராஜ், உபேந்திரா, சவுபின் சாஹிர் உள்ளிட்ட பல பிரபலங்கள் இணைந்து நடிக்கின்றனர். கூலி படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு சமீபத்தில் விசாகப்பட்டினத்தில் நிறைவு பெற்றது. கடந்த சில மாதங்களாக இந்த படத்தில் ஹிந்தி நடிகர் அமீர்கான் நடிக்கவுள்ளதாக தகவல் பரவியது. தற்போது இதில் அமீர் கான் நடிப்பது உறுதியாகியுள்ளது.

நடன நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பிரபலமடைந்த சாய் பல்லவி, 2015 ஆம் ஆண்டு வெளியான பிரேமம் திரைப்படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார்.

அந்த படத்தின் வெற்றி அவரை தென்னிந்திய சினிமா முழுவதும் பிரபலமானார். அதையடுத்து தமிழில் தியா, என் ஜி கே, கார்கி மற்றும் மாரி 2 உள்ளிட்ட ஏராளமான படங்களில் நடித்தார். இந்நிலையில் அவர் கடந்த காலங்களில் அஜித்தின் வலிமை மற்றும் விஜய்யின் வாரிசு ஆகிய படங்களில் நடிக்க மறுத்ததாக தகவல் ஒன்று பரவி வருகிறது.

இந்த படங்களின் கதை அவருக்கு சென்ற போது, அதில் தன்னுடைய கதாபாத்திரத்துக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்று சொல்லி அவர் நிராகரித்து விட்டார் என்று தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் இது குறித்து சாய்பல்லவி இப்போது விளக்கமளித்துள்ளார். அதில் “ விஜய் மற்றும் அஜித் ஆகியோரோடு இணைந்து நடிக்க எனக்கு எந்த வாய்ப்பும் வரவில்லை.

அப்படி இருக்கையில் நான் எப்படி அவர்களோடு இணைந்து நடிக்க மறுத்திருக்க முடியும். இப்படி நடக்காத ஒரு விஷயத்தை திரித்து பேசுவது ரொம்பவே தவறானது” எனக் கூறியுள்ளார்.

## விஜய் அஜித்துடன் நடிக்க மறுத்தேனா?



## ஜெயலலிதா– கமல் இணைந்து நடித்த பாடல்

1964ஆம் ஆண்டு புதுமை இயக்குநர் ஸ்ரீதரின் இயக்கத்தில் வெளிவந்த “வெண்ணிற ஆடை” என்ற திரைப்படத்தின் மூலம் புதுமுக நாயகியாக தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர்தான் ஜெயலலிதா.

தமிழில் இவரது இரண்டாவது படமே அன்றைய உச்ச நட்சத்திரமான எம்ஜிஆருக்கு ஜோடியாக “ஆயிரத்தில் ஒருவன்” என்ற திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றவர்.

தொடர்ந்து சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன், முத்துராமன், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், என அன்றைய முன்னணி நாயகர்கள் அனைவருடனும் இணைந்து நடித்து ஏராளமான வெற்றிப் படங்களைத் தந்துள்ளார். 1980க்குப் பிறகு நடிப்பிலிருந்து முற்றிலும் தன்னை விலக்கிக் கொண்டார். அடுத்த தலைமுறை நாயகர்களான ரஜினி, கமல் ஆகியோருக்கு இவரோடு இணைந்து நடிக்கும் வாய்ப்பு கிடைக்காமலே போனது .

அதேசமயம் நடிகர் கமல்ஹாசன் நடன இயக்குநர் தங்கப்பன் மாஸ்டரிடம் உதவி நடன இயக்குநராக பணிபுரிந்து வந்த கால கட்டத்தில் எம்.ஜி.ஆர். உட்பட பல உச்ச நட்சத்திரங்களுக்கு அவர் நடனப் பயிற்சி அளித்ததுண்டு. அந்த வகையில் இயக்குநர் எஸ்பி முத்துராமன் இயக்கத்தில், ஆர் முத்துராமன், ஜெயலலிதா, ஸ்ரீகாந்த், மேஜர் சுந்தர்ராஜன், கேஏ தங்கவேலு, சச்சு ஆகியோர் நடித்து 1974ஆம் ஆண்டு வெளிவந்த “அன்புத்தங்கை” என்ற திரைப்படத்தில் கேவி மகாதேவன் இசையமைப்பில் பி சுசீலா பாடியிருக்கும் “மன்னர்கள் வணங்கும் சிலையானேன்” என்ற பாடல் காட்சியில் புத்தராக நடிகர் கமல்ஹாசன் தோன்ற, அவர் முன் நடனமாடி மயக்கும் நடன மங்கையாக ஜெயலலிதா ஆடிப் பாடும் அந்தப் பாடல் காட்சி கலைச்செல்வி ஜெயலலிதாவையும், கலைஞானி கமல்ஹாசனையும் இணைத்த ஒரு அபூர்வ பாடல் காட்சியாக அமைந்திருக்கின்றது.

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரே ஒரு ராஜ இசை வண்டு.

அறிவில் சிறந்துள்ளாய் ஆசைக்குயிலே அரும் பொருளே – கிடைத்தற்கு அரிய செல்வமே தெய்வதமே – என் தெய்வமே.

பொன்னை நிகர்த்த குரல் பொங்கி வரும் இன்பத்தை தவிர பாட்டு முடியும் வரை பார் அறியேன் விண்ணறியேன், என்னையே அறியேன் என்று சொல்லும் பாரதியின் இசை உணர்வுக்கு மகுடமாய், இசை தரும் தவிப்புக்கும் தத்தளிப்புக்கும் பிரம்ம தேவனை அழைக்கிறார். பிரம்மனே!,உன் படைப்பு மிக மிக ஆச்சரியமானவை. காடு , வானம், கடல் யாவுமே ஆச்சர்யம் ஆனாலும் உன் படைப்புக்களில் பெரும் ஆச்சர்யமானது அமுதம் போன்ற இசை தான். ஐம்பூதங்களும் அதிசயம். ஆனாலும் ஸ்வரங்களின் சேர்க்கையால் உருவாகும் பாடலின் இனிமைக்கு இணையாகுமா ? ஆசையைத் தூண்டுகின்ற கோடிக் கணக்கான அதிசயங்களை கண்டிருக்கிறோம். அதில் சந்த ஓசை தருகின்ற இன்பம் தான் எதனோடும் ஒப்பிட்டு உவமை சொல்ல முடியாத பேரின்பம் என்று உருகி உணர்ந்து இசைந்து இசையாகி நிற்கிறார் பாரதி.

பாட்டு முடியும்வரை பாரறியேன்,
விண்ணறியேன்
கோட்டுப் பெருமரங்கள்
கூடிநின்ற காவறியேன்!
தன்னை யறியேன் தனைப்போல்
எருதறியேன்
பொன்னை நிகர்த்தகுரல் பொங்கிவரும்
இன்பமொன்றே
கண்டேன், படைப்புக்
கடவுளே! நான் முகனே! .
ஆனாலும் நின்றன் அதிசயங்கள்
யாவினுமே
கானா முதம்படைத்த காட்சிமிக
விந்தையடா!
காட்டுநெடு வானம், கடலெல்லாம்
விந்தையெனில், ...
பாட்டினைப்போல் ஆச்சரியம்
பாரின்மிசை இல்லையடா!
பூதங்க ளொத்துப் புதுமைதரல்
விந்தையெனில்
நாதங்கள் நேரும் நயத்தினுக்கு
நேராமோ?
ஆசைதருங் கோடி
அதிசயங்கள் கண்டதிலே,
ஓசைதரும் இன்பம் உவமையிலா
இன்பமன்றோ! ...

இவ்வுலகம் இனிது, அங்குள்ள உயிர்கள் அனைத்தும் இனியவை, உயிர் அற்றனவும் இனிது என்று படைப்பின் பிரம்மாண்டத்தை வியந்து வியந்து பாடினாலும்,பிரம்மனின் படைப்பில் ஒப்புயர்வற்ற அதிசயம் இசை என்று கூறும் நம் பாரதியை வியந்து எண்ணிப் பித்தாகி சரண் புகுந்து ஆட்கொள்கிறேன்.





தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
“பண்டாரவன்னியன் புத்தகசாலையில்”
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளைஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
பட்டுச் சேலைகளுக்கும், பஞ்சாபிகள்,
குருத்தாக்கள், பாட்டிசாறிகள்,
மற்றும் இமிரேசன் நகைகளுக்கும், நிறைவான
தெரிவுகளில் எம்மிடம் கிடைக்கும்
" என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! "
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
SALE
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிடேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059


KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
யேர்மனி டோட்முண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /


FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Mob: 017 645656520 Tel: 069 24 24 8079
Moselstr 33, 60329, Frankfurt am Main | Mail: trusttravelsffm@gmail.com
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்


Lido a Casa
...online bestellen auf
www.lidoacasa-ms.de


Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
WELCOME IM Jaffna SUPER.MARKT
எம்மிடம் நம்பி வாங்கோ!...
சந்தோசமாகப் போங்கோ!!...
Tel:0179 2310 560
Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)